## (எ) அரசாங்க நிதி

**1962-63ம் நிதியாண்டு**

ஐப்பசி 1962 முதல் புரட்டாதி 1963 வரையுள்ள நிதியாண்டிற்கான இலங்கை அரசாங்கத்தின் கணக்குகளை, முந்தைய வருடங்களுக்குள்ள கணக்கு விபரங்களுடன் ஒப்பிட்டு அட்டவணை II எ-1 சுருக்கமாகக் காட்டு கின்றது. மேற்படி அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளவாறு, வரவு செலவுத் திட்ட இயக்கங்களின் முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு:—

(அ) 1960-61ல் ரூபா 15139 இலட்சமாகவும், 1961-62ல் ரூபா 16206 இலட்சமாகவும் அமைந்த மொத்த அரசிறையுடன் ஒப்பிடுகையில், 1962-63ம் ஆண்டிற்கான மொத்த அரசிறை ரூபா 15934 இலட்சமாக உள்ளது.

(ஆ) 1960-61ல் ரூபா 19607 இலட்சமாகவும், 1961-62ல் ரூபா 20613 இலட்சமாகவும் அமைந்த மொத்த வாக்களிக்கப் பட்ட செலவுடன் ஒப்பிடுகையில் 1962-63ம் ஆண்டிற்கான மொத்தச் செலவு ரூபா 19987 இலட்சமாக உள்ளது. இவ் எண் தொகைகளில், ஆழ்நிதிகளுக்கு உதவிய தொகைகளும் நேரடியாக அரசிறையிலிருந்து கொடுத்து மீளப்பட்ட பொதுப்படுகடன் களும், ஏட்டுச் சீரமைப்புகளும் நீக்கப்பட்டுள்ளன.

(இ) முற்பணக் கணக்கு இயக்கங்களின் பேரில் ரூபா 137 இலட்சம் கொண்ட நிகர வரவு ஏற்பட்டமை, 1960-61ம் ஆண்டில் ஏற் பட்ட ரூபா 142 இலட்சம் கொண்ட நிகரக் கொடுப்பனவுடனும் 1961-62ம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 146 இலட்சம் கொண்ட நிகரக் கொடுப்பனவுடனும் ஒப்பிடத்தக்கது.

(ஈ) இந்த இயக்கங்களின் விளைவாக ஏற்பட்ட நிகரப் பணக்குறை ரூபா 3917 இலட்சமாகும். ஒப்பியல்பாக 1960-61ம் ஆண்டிலும், 1961-62ம் ஆண்டிலும் ஏற்பட்ட நிகரப் பணக்குறைகள் முறையே ரூபா 4625 இலட்சமாகவும், ரூபா 4561 இலட்சமாகவும் உள்ளன.

உண்மையில் ஏற்பட்ட நிகரப் பணக்குறையான ரூபா 3917 இலட்சம், மூலமதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட ரூபா 4133 இலட்சம் கொண்ட நிகரப் பணக்குறையிலும் பார்க்க ரூபா 216 இலட்சம் குறைவானதாகும். 1961-62ம் ஆண்டில் உண்மையாக ஏற்பட்ட நிகரப் பணக்குறை, மூலமதிப் பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட நிகரப் பணக்குறையிலும் பார்க்க ரூபா 1756 இலட்சத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. 1962-63ம் ஆண்டு மூலமதிப் பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட குறையிலும் பார்க்க உண்மையாக ஏற்பட்ட குறை வீழ்ச்சியடைந்தமை, அரசிறையினுற் சேகரிக்கப்பட்ட தொகை பெரிதும் குறைவுற்ற பொழுதிலும் கூட ஏற்படலாயிற்று. வரவு செலவுத் திட்டக்குறையில் ஏற்பட்ட வீழ்ச்சி, பெரும்பாலும் 1962-63ம் ஆண்டில் உள்ள மொத்தச் செலவீடுகள் கணிசமாகக் குறைவுற்றமையினுல் ஏற்பட்ட தாகும். மொத்தச் செலவீடுகள், மூலமதிப்பீட்டில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க ரூபா 1315 இலட்சத்தால் குறைவுற்றுக் காணப்பட்டன. இதில் மூலதனச் செலவீடுகளின் பேரில் ஏற்பட்ட குறை ரூபா 710 இலட்சமாகவும், மீண்டுவரும் செலவுகளின் பேரில் ஏற்பட்ட குறை ரூபா 605 இலட்சமாகவும் உள்ளன. இவற்றை வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின் சதவீதமாகக் கணித்து நோக்கின், அவை முறையே, 15.0 சதவீதமாகவும், 3.7 சதவீத மாகவும் அமைகின்றன. முற்பணக் கணக்கு இயக்கங்களின் பேரிலுள்ள

நிகர வரவுகளான ரூபா 137 இலட்சம் கொண்ட தொகையும், மூலமதிப் பீடுகளுடன் ஒப்பிடுகையில், உண்மையாக ஏற்பட்ட நிகரப் பணக்குறையைக் குறைப்பதற்குத் துணைபுரிந்தது. 1961-62ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1962-63ம் ஆண்டில் ஏற்பட்ட நிகரப் பணக்குறை, ரூபா 644 இலட்சம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டுகின்றது. இது, மூலதனச் செலவீடுகளில் ஏற்பட்ட ரூபா 783 இலட்சம் கொண்ட வீழ்ச்சியினாலும் முற்பணக்கணக்கு இயக்கங்களில் ஏற்பட்ட ரூபா 283 இலட்சம் கொண்ட வரவுகளினாலும் ஏற்பட்டது. ஆனால் அவற்றை ஓரளவு ஈடுசெய்யக்கூடியனவாக, அரசிறை ரூபா 272 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றும், மீண்டுவருஞ் செலவுகள் ரூபா 157 இலட்சத்தால் அதிகரித்தும் காணப்பட்டன.

**அரசிறை**

பின்னிணைப்பு IIல் உள்ள 18ம் அட்டவணை, 1962-63ம் ஆண்டின் தற்கா லிக மதிப்பீடுகளையும், உண்மையாகக் கிடைத்த அரசிறையையும், பிரதான அரசிறைத் தலைப்புக்களின்படி பாகுபடுத்திக் காட்டுகின்றது. 1962-63ம் ஆண்டின் மொத்த அரசிறையான ரூபா 15934 இலட்சம், 1961-62ம் ஆண்டிற் கிடைத்த அரசிறையான ரூபா 16206 இலட்சத்திலும் பார்க்க ரூபா 272 இலட்சம் குறைவானதாகும். இவ்வாறேற்பட்ட குறை 1952-53ம் ஆண்டு முதல் வருடாவருடம் அரசிறை அதிகரித்துக் கொண்டுவந்த தன் மைக்கு எதிர்மாறானதாகும். ஒப்பியல்பில் முந்தைய நிதிவருடமான 1961-62ம் ஆண்டின் அரசிறை, 1960-61ம் ஆண்டிற்குரிய தொகையிலும் பார்க்க ரூபா 1067 இலட்சம் உயர்வானதாக உள்ளது.

1961-62ம் ஆண்டிலும் பார்க்க, 1962-63ம் ஆண்டின் அரசிறை வீழ்ச்சி யடைந்தமைக்குள்ள முக்கிய காரணம், இறக்குமதித் தீர்வைகளினாற் சேகரிக் கப்பட்ட தொகையில் மட்டும் ஏற்பட்ட ரூபா 673 இலட்சம் கொண்ட கணிசமான வீழ்ச்சியேயாகும். இவ் வீழ்ச்சியேற்படுவதற்கு மிகக் கூடுதலாகத் துணைபுரிந்த தனி விடயம் ''ஏனைய பொருட்கள்'' என்ற தொகுதியாகும். ஏற்றுமதித் தீர்வைகளும் ரூபா 122 இலட்சம் கொண்ட வீழ்ச்சிக்குக் காரணியாய் இருந்தன. இதில், தேயிலை ஏற்றுமதித் தீர்வையினாற் சேகரிக்கப் பட்ட தொகை, தேயிலை வரியும் உட்பட, ரூபா 77 இலட்சத்தால் வீழ்ச்சி யுற்றது.

1962-63ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மூலமதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில், உண்மையாகச் சேகரிக்கப்பட்ட அரசிறையில் ரூபா 1235 இலட்சம் கொண்ட வீழ்ச்சி காணப்படுகின்றது. இவ்வீழ்ச்சி ஏற்படுவதற்கு, மூலமதிப்பீடுகளிலும் பார்க்க உண்மையாகச் சேகரிக்கப்பட்ட தொகை, இறக்குமதித் தீர்வைகளின் பேரில் ரூபா 1085 இலட்சத்தாலும், ஏற்றுமதித் தீர்வைகளின் பேரில் ரூபா 29 இலட்சத்தாலும், தேசிய அபிவிருத்திவரியின் பேரில் ரூபா 71 இலட்சத்தாலும் ஏனைய அரசிறைகளின் பேரில் ரூபா 60 இலட்சத்தாலும் குறைவுற்றிருந்தமையே காரணங்களாகும். சில விடயங் களில் மட்டும் அதிகரித்த அரசிறை சேகரிக்கப்பட்டன. புகையிலை வரியினாற் சேகரிக்கப்பட்ட அரசிறையில் ஏற்பட்ட ரூபா 183 இலட்சம் கொண்ட அதிகரிப்பு, மேலதிக அறவீடும் உட்பட்ட வருமான வரியில் ஏற்பட்ட ரூபா 68 இலட்சம் கொண்ட அதிகரிப்பு, பாரமான எண்ணை உபயோகிக்கும் மோட்டார் வண்டிகளின் மீதுள்ள வரியினாற் சேகரிக்கப்பட்ட தொகையில் ஏற்பட்ட ரூபா 25 இலட்சம் கொண்ட அதிகரிப்பு ஆகியவை குறிப்பிடத் தக்கன.

1962-63ம் ஆண்டில் உண்மையாகக் கிடைத்த அரசிறையில் ஏற்பட்ட மாற்றங்களை, 1961-62ம் ஆண்டில் உண்மையாகக் கிடைத்த அரசிறை யுடனும், 1962-63ம் ஆண்டிற்கான மூலமதிப்பீடுகளுடனும் ஒப்பிட்டுப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை II எ-1

அரசாங்க நிகரப்பணை

| | 1951-52 | 1952-53 | 1953-54 |
|---|---|---|---|
| 1. நிகரப்பணமிகை/குறை (—) .. .. | – 257·1 | – 231·9 | 33·7 |
| (அ) அரசிறை .. .. .. .. | 954·0 | 952·5 | 1,026·2 |
| (ஆ) செலவு (அதாவது கடன் வாங்குதல், கடன் கொடுத்தல் இயக்கங்களின் பேரில் ஏற்பட்ட நிகர வரவுகளை அல்லது கொடுப்பனவுகளைத் தவிர்த்த மொத்தக் கொடுப்பனவுகள்) .. | – 1,211·1 | – 1,184.4 | – 992·5 |
| (i) ஆழ்நிதிக்கு வழங்கிய உதவு தொகையையும், அரசிறையிலிருந்து நேரடியாகத் திருப்பிக் கொடுக்கப்பட்ட பொதுப்படு கடனையும் தவிர்த்து மீண்டும் எழும் செலவு (2 (ஆ) (i) விடயம் பார்க்க)* .. .. .. | – 1,004·6 | – 893·5 | – 772·0 |
| (உணவு மான்யம்) .. .. | (247.8) | (127.0) | (12.0) |
| (ii) மூலதனச் செலவு* .. .. | – 203·0 | – 220·6 | – 162·3 |
| (iii) தேசிய அபிவிருத்தி ஒதுக்குநிதியால் அடைக்கப்படும் செலவு .. | – 7·7 | – 6·4 | – 3·2 |
| (iv) களஞ்சியங்கள், பொருட்கள் ஆகியனவற்றின் கணக்கிற்குக் கொடுக்கப்பட்ட முற்பணங்கள் .. | – 16·8 | – 2·4 | 4·6 |
| (v) இதர முற்பணங்கள்* .. .. | 19·0 | – 52·8 | – 61·1 |
| (vi) ஏனையவை .. .. .. | 2·0 | – 8·7 | 1·5 |
| குறை நிவர்த்திக்கு நிதியீட்டுதல் | | | |
| 2. அரசாங்கக் கடன்பாட்டு அல்லது கடன் கொடுப்பனவு இயக்கங்களின் விளைவாக ஏற்பட்ட நிகரப்பண வரவுகள் அல்லது கொடுப்பனவுகள் (—).. | 184·1 | 216·5 | – 35.3 |
| (அ) நிர்வாகக் கடன்பாடும், திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்களும் (சில்லரைக் கடன்களும் உட்பட) .. .. | – 34·2 | 11·9 | – 4·6 |
| (i) கட்டுப்பணங்கள் (வழக்குத் தொடர்வோர், ஒப்பந்தக்காரர் முதலியவர்களிடமிருந்து வந்தவையும், அந்நியநாட்டு உதவிகளில் செலவு செய்யப்படாத மீதிகளும்) .. .. .. | – 16·2 | 21·4 | – 2·1 |
| (ii) இதர பல வகை நிதிகள் (விதவைகள், அனாதைகள் உபகாரச் சம்பளநிதி, அரசாங்க சேவையாளர் சேமநிதி முதலியன) .. .. | 0·6 | – 0·2 | 0·3 |
| (iii) சில்லறைக் கடன்கள் (கமத்தொழில், கைத்தொழில் நாணய கூட்டுத்தாபனம், உள்நாட்டு அபிவிருத்திக் கடன்நிதி, உள்ளூர் ஆட்சிச்சபைகள் ஆகியனவற்றிற்குக் கொடுத்தவை) .. .. | 18·6 | – 9·3 | – 2·8 |
| (ஆ) உள்நாட்டுச் சந்தைக்கடன்பாடும், திருப்பிக் கொடுக்கப்பட்டனவும் .. .. | 218·3 | 204·6 | – 94·0 |
| (i) ரூபாய்க்கடன்கள் .. .. | 102·4 | 80·0 | 70·0 |
| ஆழ்நிதிக்கு வழங்கிய உதவு தொகையும், அரசிறையிலிருந்து நேரடியாகத் திருப்பிக் கொடுக்கப்பட்ட பொதுப்படுகடனும் (கழிய) | 18.4 | 23·1 | 22·6 |
| மீதி .. .. .. .. | 84·0 | 56·9 | 47·4 |
| (ii) இறைசேரி உண்டியல்கள் .. | 62·3 | 90·6 | – 78·1 |
| (iii) மகாவங்கி வழங்கிய முற்பணங்கள் .. | 72·0 | – 1·5 | – 4·7 |
| (iv) வரிப்பண ஒதுக்குநிதிப் பத்திரங்கள் .. .. .. .. | — | — | — |
| (v) இதர† .. .. .. | — | 58·6 | 58·6 |
| (இ) அந்நியக் கடன்பாடு .. .. .. | — | — | 63·3 |
| (i) கடன்கள் .. .. .. | — | — | 63·3 |
| திருப்பிக் கொடுக்கப்பட்டவை நீக்கி .. .. .. | — | — | — |
| | | | 63·3 |
| (ii) நன்கொடைகள் .. .. | — | — | — |
| 3. (உடனடியாகத் தேறக்கூடிய சொத்துக்களும் உட்பட) பணமீதங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் .. | – 73·0 | – 15·4 | – 1·6 |

மிகை/குறை (—)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1954-55 | 1955-56 | 1956-57 | 1957-58 | 1958-59 | 1959-60 | 1960-61 | 1961-62(இ) | 1962-63(ஈ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 127·6 | – 1·2 | – 196·4 | – 222·3 | – 413·4 | – 417·5 | – 462·5 | – 456·1 | – 391·7 |
| | 1,158·6 | 1,257·2 | 1,260·5 | 1,280·0 | 1,330·4 | 1,403·8 | 1,513·9 | 1,620.6(உ) | 1,593.4(உ) |
| | –1,031·0 | –1,258·4 | –1,456·9 | –1,502·3 | –1,743·8 | –1,821·3 | –1,976·4 | –2,076·6 | –1,985·3 |
| | –864·9(அ) | –1,014·4 | –1,105·2 | –1,280·1 | –1,432·2 | –1,511·9(ஆ) | –1,540·8(ஆ) | –1,580.7(ஆ) | (ஆ) – 1,596·4 |
| | (36.0)(அ) | (79.5) | (105.5) | (112.0) | (146.5) | (193.0) | (248.0) | (235·4) | (225·8) |
| | –215·5(அ) | – 211·0 | – 213·3 | – 282·6 | – 303·4 | – 306·6 | – 419·9 | – 480·6 | – 402·3 |
| | – 2·1 | – 4·0 | – 5·1 | – 3·0 | – 2·4 | – 1·5 | – 1·5 | – 0·7 | – 0·3 |
| | 9·9 | 1·2 | – 14·5 | — | 10·5 | – 7·1 | 1·9 | 2·4 | – 8·6 |
| | 34·0 | – 30·3 | – 115·8 | 54·5 | – 17·1 | 5·8 | – 15·9 | – 15·8 | 27·9 |
| | 7·6 | 0·1 | 3·0 | 8·9 | 0·8 | — | – 0·2 | – 1·2 | – 5·6 |
| | – 39·0 | 12·2 | 175·4 | 174·7 | 351·8 | 411·6 | 462·5 | 496·3 | 391·3 |
| | 29·1 | – 36·5 | – 9·4 | 72·5 | 27·6 | 57·4 | 29·4 | 104·5 | – 33·8 |
| | 34·5 | – 10·8 | 9·0 | 73·9 | 27·3 | 62·3 | 36·5 | 98·4 | – 28·0 |
| | – 0·9 | – 4·8 | – 2·3 | 20·1 | 4·2 | 2·7 | – 1·0 | 4·8 | 0·1 |
| | – 4·5 | – 20·9 | – 16·1 | – 21·5 | – 3·9 | – 7·6 | – 6·1 | 1·3 | – 5·9 |
| | – 80·2 | 43·5 | 166·2 | 78·5 | 291·2 | 327·6 | 406·5 | 336·0 | 331·6 |
| | 75·0 | 74·5 | 94·9 | 45·0 | 95·0 | 134·8 | 214·9 | 145·0 | 205·0 |
| | 44·5 | 39·0 | 31·1 | 26·5 | 29·7 | 30·6 | 32·1 | 37·9 | 40·4 |
| | 30·5 | 35·5 | 63·8 | 18·5 | 65·3 | 104·2 | 182·8 | 107·1 | 164·6 |
| | – 44·9 | 8·0 | – 3·0 | 74·6 | 179·0 | 228·2 | 198·4 | 248·0 | 124·1 |
| | – 65·8 | — | 96·3 | – 13·8 | 41·1 | 3·1(ஆ) | 20·6(ஆ) | – 21·0(ஆ) | 36·6(ஆ) |
| | — | — | 9·1 | – 0·8 | 5·8 | – 7·9 | 4·7 | 1·9 | 6·3 |
| | 12·1 | 5·2 | 18·6 | 23·7 | 33·0 | 26·6 | 26·6 | 55·8 | 93·5 |
| | 12·1 | 5·2 | 18·6 | 23·7 | 35·5 | 29·3 | 16·3 | 44·5 | 68·7 |
| | — | — | — | — | 2·5 | 2.7 | 3·0 | 6·8 | 6·3 |
| | 12·1 | 5·2 | 18·6 | 23·7 | 33·0 | 26·6 | 13·3 | 37·7 | 62·4 |
| | — | — | — | — | — | — | 13·3 | 18·1 | 31·1 |
| | 88·6 | 11·0 | – 21·0 | – 47·5 | – 61·7 | – 6·0 | ... | 40·2 | 4·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*1960-61 வரவு செலவுத்திட்டம் தொடக்கம், ''அரசிறையால் அடைக்கப்படும் செலவு'', எனவும் ''கடன் நிதியால் அடைக்கப்படும் செலவு'' எனவும், செலவைப் பாகுபடுத்தும் முறை கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக அரசாங்கத்தின் மொத்தச் செலவு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை, சொந்த வரும்படிகள், நிர்வாகச் செலவுகள், திணைக்களங்களின் சேவைகள், பொருளாதார அபிவிருத்தி முதலியன ஆகும். கடைசியாகக் கூறப்பட்ட மூன்று பகுதிகள் ஒவ்வொன்றும், மீண்டெழும் செலவு, மூலதனச் செலவு என மேலும் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அரசாங்கத்தின் மொத்தச் செலவு ஏழு வாக்களிப் புக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த அட்டவணையில் சொந்த வரும்படிகள், மீண் டெழும் செலவுகள் ஆகிய வாக்களிப்புக்களின் (அதாவது வாக்களிப்புக்கள் 1, 2, 4, 6) கீழ் வரும் மொத்தச் செலவும், மூலதனச் செலவு வாக்களிப்புக்களின் (அதாவது வாக்களிப்புக் கள் 3, 5, 7) மொத்தமும் முறையே மீண்டெழும் செலவு எனவும், மூலதனச் செலவு எனவும் வெவ்வேருகக் காட்டப்பட்டுள்ளன. 1960-61க்கு முந்தைய ஆண்டுகளில் இத் தகைய ஓர் பாகுபாடு கிடையாதபடியால், அரசிறையால் அடைக்கப்படும் செலவும், கடன் நிதியால் அடைக்கப்படும் செலவும், முறையே மீண்டெழும் செலவுக்கும், மூலதனச் செலவுக்கும் ஒப்பிடத்தக்கன என மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முந்தைய நிதியாண்டுகளில் ஏற்பட்டு, நிதியீட்டப்பட்ட முற்பணக் கணக்குத் தொழிற் பாடுகளின் பேரில் உண்டான நட்டங்களையும், கடன் வேலைகளுக்கான முற்பணங்களையும் மீண்டெழும் செலவுக்கும், மூலதனச் செலவுக்கும் மாற்றியதன் பயனுக எழுந்த ஏட்டுச் சீரமைப்புக்களை (பற்று, வரவுகள்) தவிர்க்கின்றது. ஆகவே இத்தொகைகள், இலங்கை அரசாங்கத்தின் கணக்குகளிற் பிரசுரிக்கப்பட்ட தொகைகளுடன் ஒத்திருக்கமாட்டா.

†அரசாங்க ஆதிக்கமுள்ள முகவர் நிலையங்களிலிருந்து பெற்ற கடன்கள்.

(அ) 1954-55ம் ஆண்டுக்கான உணவு மான்யக்கணக்காக விளங்கிய 360 இலட்சம் ரூபாய்கள் முற்பணக் கணக்குகளிலிருந்து மீண்டெழும் செலவுக்கு, 1958-59ம் ஆண்டில் மாற்றப் பட்டன. 1958-59ம் ஆண்டுக்கான தொகைகளிலிருந்து இந்த ஏட்டுச் சீரமைப்பு தவிர்க் கப்பட்டிருக்க (*குறிப்பைப் பார்க்க), 1954-55ம் ஆண்டுக்கான தொகைகள், இச்சீரமைப் பிற்கேற்பத் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) 1959-60ம் ஆண்டில், சர்வதேச நாணய நிதியில் இலங்கையின் கட்டுப்பணம் அதிகரிக்கப் பட்டதன் விளைவாக ஏற்பட்ட 370 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கொடுப்பனவையும், 1960-61ம் ஆண்டில் சர்வதேசப் புனருத்தாரண அபிவிருத்தி வங்கி, சர்வதேச அபிவிருத்திச் சங்கம் ஆகியனவற்றிற்கு செய்த 22 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கொடுப்பனவையும், சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்குச் செய்த 2 இலட்சம் ரூபா கொண்ட கொடுப்பன வையும், தவிர்க்கின்றது. இக்கொடுப்பனவுகள் மகாவங்கியிலிருந்து பெற்ற விசேடக் கடன் கள் மூலம் ஈட்டப்பட்டன.

(இ) அன்னிய நன்கொடைகளிலிருந்து ஈடுசெய்யப்படும் மூலதனச் செலவுகள், 1960-61ம் ஆண்டு முதலாக வரவு செலவுத்திட்டத்தினுள் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே 1960-61ம் ஆண்டிற்குரிய எண் தொகைகளுள், அன்னிய நன்கொடைகளிலிருந்து ஈடுசெய்யப்பட வேண்டிய மூலதனச் செலவுகளும் உட்படும்படியாகத் திருத்தியமைக்கப்பட்டமையால், இவ்வெண்தொகைகள், 1961ம் ஆண்டு அறிக்கையிற் பிரசுரிக்கப்பட்ட எண் தொகை களுடன் ஒத்து வரமாட்டா. 1960-61ம் ஆண்டிற்கு முன் வரவு செலவுத்திட்ட நிதி யீட்டத்திற்காக இறைசேரிக்கு கிடைக்கக்கூடிய அன்னிய நன்கொடைகளின் செலவு செய்யப்பட்டாத மிச்சங்கள் மட்டும் நிர்வாகக் கடன்பாடுகளுட் சேர்க்கப்பட்டுள்ளன.

(ஈ) தற்காலிகமானவை.

(உ) 1961-62ம் ஆண்டிற்கும், 1962-63ம் ஆண்டிற்குமான அரசிறையின் எண்தொகைகள் ''அரசாங்கக் கணக்குகள்'' எனப் பிரசுரிக்கப்பட்ட எண் தொகைகளுடன் பின்வரும் சீர்திருத்தங்களின் காரணத்தால் ஒத்து வரமாட்டா.

(ஊ) 1961-62ம் ஆண்டில், அரசாங்க கணக்குகளில் தேசிய அபிவிருத்தி நிதியில் வரவு வைத்துக் காட்டப்பட்டதும், தேசிய அபிவிருத்தி வரியினூற் கிடைத்ததுமான ரூபா 186 இலட்சம் கொண்ட தொகை அரசிறையிற் சேர்க்கப்பட்டும், தேசிய வெள்ள நிவாரண நிதியிலிருந்து அரசிறைக்கு மாற்றப்பட்ட ரூபா 206 இலட்சம் கொண்ட தொகை அர சிறையிலிருந்து விலக்கப்பட்டும் இருக்கின்றன. அரசிறையில் வரவு வைத்துக் காட்டப் பட்ட, அன்னிய அரசாங்கங்களாலும், முகவர் நிலையங்களாலும் நன்கொடையாக வழங் கப்பட்ட உபகரணங்களின் பெறுமானமாகிய ரூபா 47 இலட்சம் கொண்ட தொகை, அரசிறையிலிருந்து விலக்கப்பட்டு அன்னிய நன்கொடைகளின் கீழ் (விடயம் 2 (இ) (ii)) காட்டப்பட்டிருக்கின்றது. 1962-63ம் ஆண்டின் தேசிய அபிவிருத்தி வரியினூற் கிடைத்த ரூபா 175 இலட்சம் கொண்ட தொகை அரசிறையின் கீழ் மாற்றப்பட்டிருக்கையில், அன்னிய அரசாங்கங்களாலும், முகவர் நிலையங்களாலும் நன்கொடையாக வழங்கப்பட்ட உபகரணங்களின் பெறுமானமாகிய ரூபா 28 இலட்சம் கொண்ட தொகை அரசிறையி லிருந்து விலக்கப்பட்டு அன்னிய நன்கொடைகளின் கீழ்க் காட்டப்பட்டிருக்கின்றது.

## அட்டவணை II எ-2

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | மூலமதிப்பீடுகள் 1962/63 | உண்மையான 1962/63 (தற்காலிகமாக) | உண்மையான 1961/62 | மாற்றம் 1961/62ல் இருந்து (உண்மையான) | மூலமதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 1962/63ன் (உண்மையில்) அதிகரிப்பு (+) அல்லது குறை (—) (அ) |
|---|---|---|---|---|---|
| 1. ஏற்றுமதித் தீர்வைகள் .. .. | 281·6 | 278·7 | 290·9 | –12·2 | – 2·9 |
| (அ) தேயிலை (தேயிலை வரியும் உட்பட) | 212·3 | 215·8 | 223·5 | – 7·7 | 3·5 |
| (ஆ) இரப்பர் .. .. .. | 35·3 | 29·3 | 30·2 | – 0·9 | – 6·0 |
| (இ) தெங்கு .. .. .. | 28·3 | 27·4 | 31·4 | – 4·0 | – 0·9 |
| 2. இறக்குமதித் தீர்வைகள் .. .. | 506·2 | 397·7(ஆ) | 465·0 | –67·3 | –108·5 |
| (அ) பஞ்சிலாடைகள் .. .. | 31·2 | 22·8 | 25·2 | – 2·4 | – 8·4 |
| (ஆ) மதுபானம் .. .. | 15·6 | 9·3 | 14·2 | – 4·9 | – 6·3 |
| (இ) புகையிலையும் சிகரெட்டுகளும் .. | 66·0 | 46·1 | 51·9 | – 5·8 | – 19·9 |
| (ஈ) ஏனையவை .. .. | 207·0 | 148·3 | 191·9 | –43·6 | – 58·7 |
| 3. வருமானவரி (மேலதிக அறவீடு நீக்கி) | 210·0 | 217·2 | 231·9 | –14·7 | 7·2 |
| மேலதிக அறவீடு .. .. | 42·0 | 41·6 | 30·5 | 11·1 | – 0·4 |
| 4. செலவு, செல்வம், நன்கொடை ஆகிய வரிகள் .. .. .. | 15·0 | 12·4 | 11·6 | 0·8 | – 2·6 |
| 5. சாராய விற்பனை இலாபங்கள் .. | 98·0 | 98·0 | 72·0 | 26·0 | — |
| 6. புகையிலை வரி .. .. | 62·0 | 80·3 | 62·8 | 17·5 | 18·3 |
| 7. பாரமான எண்ணெய் உபயோகிக்கும் மோட்டார் வாகன வரி .. | 8·5 | 11·0 | 9·0 | 2·0 | 2·5 |
| 8. மின்சாரத் திணைக்கள வருமானம் .. | 48·6 | 35·2 | 31·6 | 3·6 | – 13·4 |
| 9. காணிவரி .. .. .. | 12·0 | 11·2 | 11·7 | – 0·5 | – 0·8 |
| 10. உயர்தொழில், வர்த்தகங்கள் பதிவு செய்தல் வரி .. .. .. | 7·0 | 1·0 | 3·2 | – 2·2 | – 6·0 |
| 11. மூலதனப் பங்கு வரி .. .. | 3·5 | 1·4 | 2·1 | – 0·7 | – 2·1 |
| 12. ''விஸா'' வரி .. .. .. | 4·0 | 4·3 | 5·8 | – 1·5 | 0·3 |
| 13. 1961-62ல் புகுத்தப்பட்ட புதிய வரிகள்:— .. .. .. | | | | | |
| (அ) விற்பனைவரி (விதிக்கப்படவில்லை) | 0·1 | 0·1 | 0·1 | — | — |
| (ஆ) தேசிய அபிவிருத்தி வரி .. | 25·0 | 17·9(இ) | 18·9(இ) | – 1·0 | – 7·1 |
| (இ) பங்கீட்டு அரிசிப்புத்தக வரி .. | 5·0 | 3·7 | 3·9 | – 0·2 | – 1·3 |
| (ஈ) மேலதிக வரி .. .. | 1·0 | 0·3 | ... | 0·3 | – 0·7 |
| 14. ஏனைய அரசிறை .. .. | 387·4 | 381·4 | 369·6 | 11·8 | – 6·0 |
| மொத்தம் .. .. | 1716·9 | 1593·4(இ) | 1620·6(இ) | –27·2 | –123·5 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

(அ) முந்தைய வருடங்களில் உண்மையாகச் சேகரிக்கப்பட்ட அரசிறையிலும் பார்க்கக் கூடுதலாக மதிப்பிடப்பட்டமை, 1961-62ல் ரூபா 1560 இலட்சமாகவும் 1960-61ல் ரூபா 1200 இலட்சமாகவும் உள்ளன.

(ஆ) உத்தரவுச் சீட்டு முறையின் கீழ் அமைந்த இறக்குமதிகளின் மீதுள்ள உத்தரவுச் சீட்டுக் கூலிகளாகச் சேகரிக்கப்பட்ட ரூபா 84 இலட்சமும் உட்படும்.

(இ) 1961-62, 1962-63 ஆகிய ஆண்டுகளின் அரசிறை என இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் எண் தொகைகள், ''அரசாங்கக் கணக்குகள்'' என்பதிற் பிரசுரிக்கப்பட்ட எண் தொகைகளுடன் ஒத்து வரமாட்டா. ஏனெனிற், பின்வரும் சீராக்கங்கள் செய்யப்பட்டிருக்கின்றன—(i) 1961-62ல், தேசிய அபிவிருத்தி வரியினூற் சேகரிக்கப்பட்டு அரசாங்கக் கணக்குகளில் தேசிய அபிவிருத்தி நிதியில் வரவுவைத்துக் காட்டப்பட்ட ரூபா 186 இலட்சம், இங்கு அரசிறைகளிற் சேர்க்கப்பட்டிருப்பதோடு, தேசிய வெள்ளநிவாரண நிதியிலிருந்து அரசிறைக்கு மாற்றிப் பதியப்பட்ட ரூபா 206 இலட்சம் இங்கு நீக்கப்பட்டும், அன்னிய அரசாங்கங்களினூலும் முகவர் நிலையங்களினூலும் நன்கொடையாக வழங்கப்பட்ட உபகரணங்களின் பெறுமானமான ரூபா 47 இலட்சம் அரசாங்கக் கணக்குகளில் அரசிறையோடு வரவு வைத்திருக்கப்பட்டமை இங்கு நீக்கப்பட்டும் உள்ளன. (ii) 1962-63ல் தேசிய அபிவிருத்தி வரியினூற் சேகரிப்பட்ட ரூபா 175 இலட்சம் இங்கு அரசிறையோடு சேர்க்கப்பட்டும், அன்னிய அரசாங்கங்களினூலும் முகவர் நிலையங்களினூலும் நன்கொடையாக வழங்கப்பட்ட உபகரணங்களின் பெறுமானமான ரூபா 28 இலட்சம் இங்கு நீக்கப்பட்டும் உள்ளன.

ஏற்றுமதித் தீர்வைகளினுற் கிடைத்த அரசிறை 1961-62ம் ஆண்டில் உண்மையாகச் சேகரிக்கப்பட்ட தொகையிலும் பார்க்க ரூபா 122 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. இவ்வீழ்ச்சி, தேயிலை ஏற்றுமதித் தீர்வையினுற் சேகரிக்கப்பட்ட தொகை ரூபா 77 இலட்சத்தால் குறைவுற்றமையினுலும், தெங்குப் பொருட்களின் ஏற்றுமதித்தீர்வை ரூபா 40 இலட்சத்தாற் குறைவுற்றமையினுலும் ஏற்பட்டது. இரப்பர் தீர்வையினுற் சேகரிக்கப்பட்ட தொகையும் ரூபா 9 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. 1962-63ம் ஆண்டிற் தேயிலை ஏற்றுமதித்தீர்வையினுற்[1] சேகரிக்கப்பட்ட அரசிறை, முந்தைய வருடத்திலும் பார்க்கக் குறைவுற்றமைக்கு உள்ள காரணங்கள் (அ) கொழும்பு ஏலத்தில் நிலவிய சராசரி விலைகள் வீழ்ச்சியடைந்தமையினுல், தேயிலை வரியிலிருந்து கிடைத்த தொகை குறைவுற்றமை, (ஆ) காலி, திருகோணமலை ஆகிய துறைமுகங்களினூடாக ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைகளின் மீதுள்ள ஏற்றுமதித்தீர்வை 1963ம் ஆண்டு சித்திரை மாதம் முதல் இருத்தலுக்கு 2 சதத்தாற் குறைக்கப்பட்டமை, (இ) ஏற்றுமதி அளவு 25 இலட்சம் இருத்தல்களால் அதிகரித்ததன் பயனுக ஏற்றுமதித்தீர்வையினுற் சேகரிக்கப்பட்ட அதிகரிப்பான அரசிறையை, மேற்கூறிய (அ), (ஆ) விலுள்ள காரணிகள் மேலதிகமாக ஈடுசெய்தமை—முதலினயவாகும். இந்நிதியாண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட இரப்பரின் அளவு 216 இலட்சம் இருத்தல்களால் அதிகரித்த போதிலும், இவ்வருடம் இரப்பரின் ஏற்றுமதித்தீர்வையினுற் சேகரிக்கப்பட்ட அரசிறை வீழ்ச்சியுற்றது. இவ்வீழ்ச்சி இவ்வருடம் நிலவிய விலைகள் குறைவுற்றமையினுலேயே ஏற்படலாயிற்று[2]. தெங்குப் பொருட்களிலிருந்து கிடைத்த அரசிறை வீழ்ச்சியுற்றமை, பெரும்பாலும் அவற்றின் ஏற்றுமதி அளவு குறைவடைந்தமையினுல் ஏற்பட்டதாகும். 1961-62ம் ஆண்டில் 102,300 தொன்களாக அமைந்த தேங்காய் எண்ணை ஏற்றுமதி 1962-63ம் ஆண்டில் 84100 தொன்களுக்கு வீழ்ச்சியுற்றது. இதே காலத்திற் கொப்பரு ஏற்றுமதி 21600 தொன்களாலும், தேங்காய்த் துருவலின் ஏற்றுமதி 2500 தொன்களாலும் வீழ்ச்சியுற்றன. ஆயினும் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிகளின் பயனுக அரசிறையின் மீது தோன்றிய பலாபலன்கள், 1962-63ம் ஆண்டில் நிலவிய சாதகமான விலைகளைத் தொடர்ந்து உயர்ந்த விகிதாச்சாரமுடையனவாக விளங்கிய ஏற்றுமதித் தீர்வைகளினுல் ஓரளவு ஈடுசெய்யப்பட்டன. ஆயினும், ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு குறைவுற்றதன் பயனுல் ஏற்பட்ட அரசிறைக் குறை, அந்தச் சாதகமான விலைகளின் பயனுல் ஈடுசெய்யத்தக்க அளவிலும் பார்க்க மிகக் கூடுதலாக விளங்கிற்று.

முன்னர் கூறியவாறு, 1962-63ம் ஆண்டில் இறக்குமதித்தீர்வைகளினுற் சேகரிக்கப்பட்ட அரசிறை, முந்தைய வருடத்திலும் பார்க்க, ரூபா 673 இலட்சம் குறைவானதாகும். ''ஏனைய பொருட்கள்'', மதுபானம்,

---

(1) 1959ம் ஆண்டு ஆனிமாதம் முதல், கொழும்பு ஏலத்தில் ஒரு இருத்தல் ரூபா 1·85 படியான விலைக்குக் கூடுதலாக விற்கப்படும் சகல தேயிலைகளின் மீதும், அந்த மேலதிக விலையில் 50 சதவீதமான வரி விதிக்கப்பட்டது. அவ்வாறு விதிக்கப்படத்தக்க ஆகக்கூடியவரி இருத்தலுக்கு 70 சதமாக உள்ளது. பெறுமானத்தின்படி வேறுபடத்தக்க இவ்வரியைத் தவிர, நிலையான ஒரு ஏற்றுமதித்தீர்வையும் விதிக்கப்பட்டது. அத்தீர்வை, ஒரு இருத்தலுக்கு 35 சதமாக உள்ளது.

(2) 28-11-63 முதல் இரப்பரின் மீதுள்ள ஏற்றுமதித்தீர்வைகள் ஒரு சாய்வுப் பிரமாணமுறைப் படி அமைக்கப்பட்டன.

பஞ்சிலாடைகள் ஆகியனவற்றின் பேரிற் சேகரிக்கப்பட்ட தீர்வைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ரூபா 609 இலட்சமாகக் காணப்பட்டது. இதை ஓரளவு 42 இலட்சம் ரூபாய்களால் ஈடுசெய்து புகையிலை, சிகரட்டுகள் ஆகியன வற்ருற் சேகரிக்கப்பட்ட தீர்வைகள் அதிகரித்தன. இவ் அதிகரிப்பு, 1962ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில், புகையிலை, சிகரட்டு ஆகியனவற்றின் இறக்குமதித் தீர்வை விகிதங்கள் அதிகரிக்கப்பட்டதன் பயனுக ஏற்பட லாயிற்று. ''ஏனைய பொருட்கள்'' என்ற தொகுதியினுற் சேகரிக்கப்பட்ட அரசிறை 1961-62ம் ஆண்டில் ரூபா 324 இலட்சம் கொண்ட நிகர அதிகரிப் பைக் காட்டியிருக்கையில், 1962-63ம் ஆண்டில் அவற்றினுற் கிடைத்த அரசிறையில் ரூபா 436 இலட்சம் கொண்ட நிகர வீழ்ச்சி காணப்படுகின்றது. இதற்குள்ள காரணம், 1962ம் ஆண்டில் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்படும் சிதைவைத் தடுக்கும் நோக்கமாக இறக்குமதிகளை நேரடியாகத் தடுப்பதன் மூலம், இறக்குமதிச் செலவீட்டைப் பாரதூரமான அளவாற் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையேயாகும்.

1962-63ம் ஆண்டு வருமான வரியினுற் சேகரிக்கப்பட்ட தொகை (மேலதிக அறவீடும் உட்பட), முந்தைய வருடத்திலும் பார்க்க ரூபா 40 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. இவ்வீழ்ச்சிக்கு, தேயிலை, இரப்பர், ஆகிய இரண்டு முக்கியமான ஏற்றுமதி விவசாயப் பொருட்களின் உற்பத்தியாள ருடைய இலாபங்கள் விலைவாசிகள் வீழ்ச்சியடைந்தமையினுலேயோ அல்லது ஆக்கச் செலவுகள் அதிகரித்தமையினுலேயோ, வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து, அவர்களுடைய பண வருமானங்களும் குறைவுற்றமையே காரணமாக இருக்கலாம். 1961-62ம் ஆண்டிலும் பார்க்க 1962-63ம் ஆண்டிற் சேகரிக்கப்பட்ட வருமானவரி குறைவுற்றமைக்கு இன்னெரு காரணம் வரி மழப்புதலாகும். ஆயினும், வரிமழப்புதல் எவ்வளவு தூரம் அரசிறையைக் குறையச் செய்தது என்பதை மதிப்பிடுதல் கடினமானது. எனினும் நிதி யீட்டக்குறைக்கான அரசாங்க நிதி இயக்கங்களையும், தனிப்பட்டோர் துறைக்கு வர்த்தக வங்கிகள் வழங்கிய நிகரக் கடன்களையும் போன்ற தன்மைகள் வேறு பணவருமானங்களின் வீழ்ச்சியினுல் ஏற்பட்ட பிரதி பலன்களை ஓரளவிலேனும் ஈடுசெய்திருக்கும் என்பதால், அவை வரித்துறை யினுற் கிடைத்த அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சியையும் ஓரளவு மெது வாக்கியிருக்கும் என்பது உணரத்தக்கது.

இரண்டு துறைகளிலிருந்து மிதமாக அதிகரித்த அரசிறைகள் கிடைத் துள்ளன. அவையாவன, சாராயவிற்பனை இலாபங்களிலிருந்து ரூபா 260 இலட்சம் கொண்ட அதிகரிப்பும், புகையிலை வரியிலிருந்து ரூபா 175 இலட்சம் கொண்ட அதிகரிப்புமாகும். சாராய விற்பனையினுற் கிடைத்த இலாபங்கள் அதிகரித்தமை, ஒரு வகையில் முந்தைய வருடங்களில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த இலாபங்களான, ரூபா 180 இலட்சம் கொண்ட தொகை 1962-63ம் ஆண்டின் அரசிறையோடு சேர்க்கப்பட்டமையாலும், மற்றெரு வகையில், இவ்வருடத்திலுள்ள விற்பனைகள் அதிகரித்தமையினுலும் ஏற்பட்டது. புகையிலையின் சந்தர்ப்பத்தில், முக்கியமாக, நுகர்ச்சி அதிகரித்த மையினுலேயே அரசிறை உயர்வுற்றது. புகையிலையின் மீதுள்ள தீர்வை 1961ம் ஆண்டு ஆடிமாதம் முதல், இருத்தலுக்கு ரூபா 20ல் இருந்து ரூபா 28க்கு அதிகரிக்கப்பட்டபோதிலும், புகையிலையின் நுகர்ச்சியில் 627,000 இருத்தல் கொண்ட அதிகரிப்பு ஏற்பட்டது.

## நடைமுறைச் செலவு

*1960-61*ம் ஆண்டு முதல் *1963-64*ம் ஆண்டு வரையான நடைமுறைச் செலவுகள், மூலதனச் செலவுகள் பற்றிய விபரங்கள் பின்வரும் அட்டவணை யிற் தரப்பட்டுள்ளன.

### அட்டவணை II எ-3

### அரசாங்கத்தின் செலவு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வருடம் | நடைமுறைச் செலவு (1) | மூலதனச் செலவு (2) | | |
|---|---|---|---|---|
| | | மெய்ச் சொத்துக்களைக் கொள்ளுதல் ஆக்குதல் பராமரித்தல் | அரசாங்க முகவர் நிலையங்களுக்குக் கடன் | மொத்தம் |
| 1960/61 .. .. .. | 1471·3 | 471·9 | 47·2 | 519·1 |
| 1961/62 .. .. .. | 1498·1 | 499·4 | 86·2 | 585·6 |
| 1962/63 (மூலமதிப்பீடுகள் | | | | |
| உண்மையாக ஏற்பட்டவை) | 1585·4 | 560·5 | 9·8 | 570·3 |
| (தற்காலிகமானவை) | 1524·9 | 485·9 | 10·0 | 495·9 |
| 1963/64 (மூலமதிப்பீடுகள்) | 1660·7 | 608·8 | 30·6 | 639·4 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*1962-63*ம் ஆண்டிற்கான தற்காலிக எண்தொகைகளின்படி உண்மை யாக ஏற்பட்ட நடைமுறைச்செலவு, அவ்வருடத்திற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிலும் பார்க்க ரூபா 605 இலட்சம் குறைவானதாக விளங்கிற்று. ஆயினும், *1962-63*ம் ஆண்டில் உண்மையாக ஏற்பட்ட செலவு (தற்காலிகமாக), *1961-62*ம் ஆண்டிற்குரிய தொகையிலும் பார்க்க ரூபா 268 இலட்சம் உயர்ந்ததாக உள்ளதென்பது, *1960-61*ம் ஆண்டிலும் பார்க்க *1961-62*ம் ஆண்டில் ஏற்பட்ட அதேயளவான அதிகரிப்புடன் ஒப்பிடத் தக்கது. *1959-60*ம் ஆண்டிலும், *1960-61*ம் ஆண்டிலும் காணப்பட்ட நடைமுறைச் செலவுகளின் அதிகரிப்புகள் முறையே, ரூபா 910 இலட்ச

(1) மீண்டுவரும் செலவுகளுக்கான வாக்குப்பணங்கள் *1, 2, 4, 6* ஆகியனவற்றின் மொத்தத்தி லிருந்து, ஆழ்நிதிக்கு உதவிய தொகையையும், நெடுங்கால உபயோகமுள்ள பொருட்களின் கொள்வனவு, பராமரிப்பு போன்ற மூலதனச் செலவுகளையும் நீக்கிய பின்னர் பெறப்படுவது தான் நடைமுறைச் செலவாகும்.

(2) மூலதனச் செலவு என்பதில் ஒரு வருடத்திற்கு மேலான உபயோகமுள்ள நிலையான இருப்புச் சொத்துக்களை ஆக்குவதற்கோ, கொள்ளுவதற்கோ, பராமரித்தற்கோ, செலவான செலவு களும், இ.போ.ச., துறைமுக (கப்பற் சரக்குக்) கூட்டுத்தாபனம், உள்ளூர்க் கடன்நிதி, அபிவிருத்திநிதி ஆகியவற்றிற்கு வழங்கிய கடன்களால் ஏற்பட்ட நிதிச் சொத்துக்களும் அடங்கும். இவ் வரையறுப்பின்படியுள்ள மூலதனச் செலவு என்பதும், அபிவிருத்திச் செலவு என்பதும் ஒரு கருத்து உடையனவல்ல. ஏனெனில் அபிவிருத்தித் தன்மையில்லாத சில முதலீட்டுச் செலவு விடயங்கள் மூலதனச் செலவினுட் சேர்க்கப்பட்டிருப்பதோடு அபி விருத்தித் தன்மையுடைய சில நடைமுறைச் செலவு விடயங்கள் சேர்க்கப்படவில்லை. மூல தனச் செலவு என்பது பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது:—மூலதனச் செலவிற்கான வாக்குப்பணங்கள் *3, 5, 7* ஆகியனவற்றின் செலவும், அன்னிய உதவிகளில் (கடன்கள், நன்கொடைகளில்) அறவிடப்படவேண்டிய செலவும், மீண்டுவரும் செலவிற்கான வாக்குப் பணங்களில் உள்ள மூலதனச் செலவு விடயங்களும், இரப்பர், தேயிலை மாற்று நடுகைக்கான மானியச் செலவு போன்ற வரவு செலவுத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவுகளும், மின்சாரத் திணைக்களத்தின் ஒதுக்குநிதிச் செலவுகளும், இவை போன்றனவும் ஆகும். வரவு செலவுத்திட்டத்திற்கு அமையாத செலவுகள், *1960-61*ல் ரூபா *283* இலட்சமும், *1961-62*ல் ரூபா *218* இலட்சமும், *1962-63*ல் மதிப்பீட்டின்படி ரூபா *240* இலட்சமும், தற்காலிகமாக ரூபா *219* இலட்சமும், *1963-64*ல் ரூபா *491* இலட்சமுமாக உள்ளன.

மாகவும், ரூபா 1059 இலட்சமாகவும் உள்ளன. 1962-63ம் ஆண்டில் நடைமுறைச் செலவு சிறிய அளவால் அதிகரித்தமைக்கு உள்ள ஏறக்குறைய முற்றுன காரணம், முந்தைய வருடத்திற்குரியது போலவே, குறைந்த அளவுடைய உணவுமான்யச் செலவுகள்தான் திரட்டிய நிதியில் அறவிடப்பட்டன, என்பதாகும். பொதுப்படுகடன் வட்டி, கல்வி, இளைப்பாறற் சம்பளங்கள் ஆகிய செலவுகளின் பேரில் எழுந்த அதிகரிப்புகள், உணவுமான்னியச் செலவில் ஏற்பட்ட வீழ்ச்சியினுல் ஓரளவு ஈடுசெய்யப் பட்டன.

1961-62ம் ஆண்டில் உணவு மான்னியத்தின் பேரில் உள்ள நிகரச் செலவு, ரூபா 2354 இலட்சமாக அமைந்தமைக்கு ஒப்பியல்பாக, 1962-63ல் ரூபா 2258 இலட்சம் கொண்ட நிகரச் செலவு ஏற்பட்டது.(1) முந்தைய வருடங்களுக்குரிய ஒப்பியல்பான தொகைகள், 1960-61ல் ரூபா 2480 இலட்சமாகவும், 1959-60ல் ரூபா 1930 இலட்சமாகவும், 1958-59ல் ரூபா 1465 இலட்சமாகவும் உள்ளன. உணவு மான்னியச் செலவுகளை, மொத்த நடைமுறைச் செலவுகளின் சதவீதமாக நோக்குமிடத்து அவை 1962-63ம் ஆண்டில் 14.8 சதவீதமாகவும், 1961-62ம் ஆண்டில் 15.7 சதவீதமாகவும், 1960-61ம் ஆண்டில் 16.9 சதவீதமாகவும் விளங்குகின்றன. முற்பணக் கணக்குகளினூடாக நிதியீட்டப்பட்ட ரூபா 127 இலட்சமும் உட்பட்ட நிகர உணவு மான்னியச் செலவான ரூபா 2385 இலட்சத்தை, இவ் அதிகரித்த மான்னியமும் உட்படும்படியாகச் சீராக்கப்பட்ட வாக்களிக் கப்பட்ட நடைமுறைச் செலவின் சதவீதமாக நோக்குகையில், அது 15.5 சதவீதமாக உள்ளது.

உணவு ஆணையாளராற் கொடுக்கப்பட்ட விபரங்களின்படி 1962-63ம் நிதியாண்டில் ஏற்பட்ட நிகர உணவு மான்னியச் செலவுகளின் தற்காலிக விபரங்களும், 1961-62ம் ஆண்டில் உண்மையாக ஏற்பட்ட செலவுகளும் பாகுபாடுசெய்யப்பட்டு அட்டவணை II எ-4ல் காட்டப்பட்டுள்ளன. இரு வருடங்களுக்கிடையில் ஏற்பட்ட மாற்றங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.(2)

---

(1) இவ் எண்தொகைகள் இறைசேரியின் பேரேடுகளிலிருந்து பெறப்பட்டன. நிகர உணவு மான்னியச் செலவுகள் சம்பந்தமாக உணவு ஆணையாளராற் கொடுக்கப்பட்ட விபரங்கள் இறைசேரியின் எண்தொகைகளிலிருந்து வேறுபடுகின்றன. அதற்குள்ள காரணங்கள் பின் வருமாறு:—1961-62ம் ஆண்டின் நிகர உணவுமான்னியச் செலவென உணவு ஆணையாள ராற் தரப்பட்ட ரூபா 2307 இலட்சம் கொண்ட தொகை இறைசேரியின் தொகையிலும் பார்க்க ரூபா 47 இலட்சம் குறைவாக உள்ளது. இத்தொகை, உணவு ஆணையாளரின் கணக்குகள் பரிசோதிக்கப்பட்டபின் அரசிறையோடு வரவுவைக்கப்படும். இதேபோல 1962-63 ஆண்டின் நிகர உணவு மான்னியச் செலவான தற்காலிக மதிப்பீட்டிலுள்ள ரூபா 2385 இலட்சம் கொண்ட தொகை, 1961-62ம் ஆண்டின் உண்மைத் தொகையிலும் பார்க்க ரூபா 78 இலட்சம் கூடுதலானதாகும். இறைசேரியின் தொகையான ரூபா 2258 இலட்சத்திற்கும் உணவு ஆணையாளரின் தொகையான ரூபா 2385 இலட்சத்திற்குமிடையி லுள்ள வேற்றுமை, அதாவது ரூபா 127 இலட்சம், துணையான மதிப்பீடுகள் உபயோகிக் கப்படாதமையால் ஏற்பட்டது. இறைசேரிப் பேரேட்டிலுள்ள 1962-63ம் ஆண்டிற்கான ரூபா 2258 இலட்சம் கொண்ட எண் தொகைக்கும் 1962-63ம் ஆண்டில் உண்மையாக ஏற்பட்ட செலவிற்குமிடையிலுள்ள வேற்றுமை, முற்பணக் கணக்குகளினூடாக நிதியீட் டப்பட்டுச் சீராக்கப்படும்.

(2) இருதரப்பட்ட இவ்வெண்தொகைகளையும் நேரடியாக ஒப்பிடுதல், தற்காலிகமான எண் தொகைகள் உண்மையான எண் தொகைகளிலிருந்து கணிசமாக வேறுபடாமல் இருக்கின்ற இடங்களில் மட்டுமே நியாயமானது.

## அட்டவணை II எ-4

### 1962-63-ம் ஆண்டின் உணவு மானியச் செலவு—1961-62-ம் ஆண்டுடன் ஒப்பியல்பாக

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1962/63* | 1961/62 | மாற்றம் |
|---|---|---|---|
| 1. இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனையில் நட்டம் (மான்னியம்)† .. .. .. | 126·5 | 125·2 | – 1·3 அதிகரித்த நட்டம் |
| 2. உள்ளூர் அரிசி விற்பனையில் நட்டம் (மான்னியம்)† .. .. .. .. | 278·5 | 268·5 | – 9·8 அதிகரித்த நட்டம் |
| 3. விநியோகச் செலவுகளும் ஏனைய செலவுகளும் | 28·0 | 26·3 | – 1·7 அதிகரித்த நட்டம் |
| 4. மொத்தம் (1 முதல் 3 வரை) .. .. | 433·0 | 420·2 | |
| 5. சீனி விற்பனையில் இலாபம் .. .. | 142·4 | 156·8 | –14·4 குறைவுற்ற இலாபம் |
| 6. கோதுமைமா விற்பனையில் இலாபம் .. | 26·1 | 29·4 | – 3·3 குறைவுற்ற இலாபம் |
| 7. ஏனைய பொருட்கள் .. .. .. | 25·9 | 3·4 | +22·5 அதிகரித்த இலாபம் |
| 8. மொத்தம் (5 முதல் 7 வரை) .. .. | 194·4 | 189·6 | |
| 9. நிகர உணவு மான்னியத்தின் மொத்தம் (4 சய 8) .. .. .. .. | 238·5 | 230·7 | + 7·8 அதிகரித்த நட்டம் |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*தற்காலிகமானவை.

†குறித்த அளவுள்ள அரிசியின் பேரிலுள்ள நட்டம் (மான்னியம்), பின்வருமாறு கணிக்கப்பட்டுள்ளது:

(அ) இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனையில் உள்ள நட்டம் (மான்னியம்) என்பது, அரசாங்கத்தின் சராசரி இறக்குமதிச் செலவிற்கும் உத்தரவுபெற்ற சில்லறை வியாபாரிகளுக்கான சராசரி விற்பனை விலைக்கும் இடையிலுள்ள வித்தியாசமாகும். இறக்குமதிச் செலவில், கொள்வனவு விலையும் கப்பற் கூலியும் பண்டகசாலைவரையான செலவுகளும் உட்படும்.

(ஆ) உள்ளூர் அரிசியின் விற்பனையில் உள்ள நட்டம் (மான்னியம்) என்பது, அரசாங்கத்தின் உள்ளூர் அரிசிக் கொள்வனவு விலைக்கும் உத்தரவாதம் பெற்ற சில்லறை வியாபாரிகளுக்கான சராசரி விற்பனை விலைக்கும் இடையிலுள்ள வேற்றுமையாகும்.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியிலுள்ள நட்டம் நுகர்வோர் மான்னியமாக இருக்கையில், உள்ளூர் அரிசியில் உள்ள நட்டத்தில், நுகர்வோர் மான்னியமும் உற்பத்தியாளர் மான்னியமும் அடங்கும்.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் விற்பனையினால் ஏற்பட்ட நட்டம், 1962-63ம் ஆண்டில் அதிகரித்தமைக்கு உள்ள காரணம் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் இறக்குமதி விலை அதிகரித்தமையே எனக் கூறலாம். 1961-62ம் ஆண்டில் ஒரு தொன்னுக்கு ரூபா 535 ஆக இருந்த பர்மாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் சராசரி இறக்குமதி விலை 1962-63ம் ஆண்டில் ஒரு தொன்னுக்கு ரூபா 546 ஆக அதிகரித்தது. இது ஒரு தொன்னுக்கு ரூபா 11 கொண்ட அதிகரிப்பாகும். சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் சராசரி இறக்குமதிவிலை இன்னும் கூடுதலான அதிகரிப்பைக் காட்டிற்று. அது 1961-62ம் ஆண்டிற்குரிய ரூபா 515ல் இருந்து 1962-63ம் ஆண்டில் ரூபா 541க்கு அதிகரித்தது. இது ஒரு தொன்னுக்கு ரூபா 26 கொண்ட அதிகரிப்பாகும். உள்நாட்டு அரிசியின் பேரில் உள்ள நட்டம் அதிகரித்தமைக்குக் கூடுதலான உள்நாட்டு அரிசி கொள்வனவு செய்யப்பட்டமையும் விற்பனை செய்யப்பட்டமையும் காரணிகளாக விளங்கின.

சீனி விற்பனையாற் கிடைத்த இலாபம் குறைவுற்றமைக்கு உள்ள காரணம், சீனியின் கொள்வனவு விலை அதிகரித்திருக்கையில் சீனியின் சில்லறை விற்பனை விலை மாற்றமின்றி இருந்தமையேயாகும். 1961-62ம் ஆண்டில் ஒரு தொன்னுக்கு ரூபா 500 ஆக இருந்த வெள்ளைச் சீனியின் சராசரி இறக்குமதி விலை, 1962-63ம் ஆண்டில் ரூபா 1193 ஆக விளங்கிற்று. இது இருமடங்கிலும் கூடுதலான சராசரி இறக்குமதி விலையாகும். முந்தைய நிதியாண்டின் போது குறைந்த விலைகளிற் கொள்வனவு செய்யப்பட்ட சீனியின் கையிருப்புக்கள் இந்நிதியாண்டின் தொடக்கத்தில் இருந்திருக்காவிடின் சீனி விற்பனையாற் கிடைத்த இலாபத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி இன்னும் கூடுதலாக இருந்திருக்கும். இக் கையிருப்புக்கள் குறைக்கப்பட்டமை, சீனி விற்பனையாற் கிடைத்த இலாபத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியையும் நிகர உணவு மான்னியச் செலவின் அளவையும் உண்மையிற் சிறுகச் செய்தது.

அவுஸ்திரேலியாவிலிருந்து வரும் கோதுமை மா, 1960-61, 1961-62 ஆகிய நிதியாண்டுகளில் தொன்னுக்கு ரூபா 461ஐக் கொள்வனவு விலையாகக் கொண்டு, கொள்விலையில் ஓர் மாற்றமுமில்லாதிருந்தது. 1962-63ம் நிதியாண்டில் இதன் கொள்வனவு விலை ரூபா 20தால் அதிகரித்துத் தொன்னுக்கு ரூபா 481 ஆக விளங்கியது.

உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ்ப் பெற்ற நெல்லினது கொள்வனவுகள், சென்ற வருடத்துக் கொள்வனவுகளாகிய 250,65,890 புசல்களுடன் ஒப்பிடுகையில், 1962-63ம் ஆண்டில் 450,055 புசல்கள் அதிகரிப்புடன் கூடி 255,15,945 புசல்களாக விளங்கின.

மூலதனச் செலவு

1962-63ம் ஆண்டிற்கான மொத்த மூலதனச் செலவு (அதாவது, வரவு செலவுத்திட்டச் செலவாகிய வாக்குப்பணங்கள், 3, 5, 7 ஆகியவற்றின் மொத்தம்) 4023 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. இதனோடு வரவு செலவுத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவுகளாகிய தேயிலை, இரப்பர், புனர்நடுகை மான்னியச் செலவையும், அரசிறை—வரவு செலவுத் திட்டத்தில் உள்ள மூலதன விடயங்கள் முதலியனவற்றையும் சேர்த்தால், 1962-63ம் ஆண்டில் இருந்த மொத்த மூலதனச் செலவு, 4959 இலட்சம் ரூபாய்களாக (தற்காலிகமானது) விளங்கியது. இது, இவ்வருடத்திற்கான மூலமதிப்பீட்டிலும் பார்க்க 744 இலட்சம் ரூபாய்கள் குறைவானதாகவும், 1961-62ம் ஆண்டிற்கான உண்மைச் செலவைவிட 897 இலட்சம் ரூபாய்கள் குறைவானதாகவும் உள்ளது. மெய்ச் சொத்துக்களைக் கொள்ளுதல், ஆக்குதல், பராமரித்தல் சம்பந்தமான மூலதனச் செலவுகள், 1961-62ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1962-63ம் ஆண்டில் 135 இலட்சம் ரூபாய்களாற் குறைவுற்றன. அரசாங்க முகவர் நிலையங்களுக்கான கொடுகடன்கள், 1961-62ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1962-63ம் ஆண்டில் 762 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றன. மெய்ச்சொத்துக்களைக் கொள்ளுதல், ஆக்குதல், பராமரித்தல் சம்பந்தமான மூலதனச் செலவுகளின் வீழ்ச்சி, பிரதானமாக விவசாயம், நீர்ப்பாய்ச்சுதல், மீன்பிடித்தல் என்ற பாகுபாட்டின் கீழேயே ஏற்பட்டது. அரசாங்க முகவர் நிலையங்களுக்கான கொடுகடன்களினது தொகையின் வீழ்ச்சி, பிரதானமாக, இலங்கை போக்குவரத்து சபைக்கும், துறைமுக (கப்பற்சரக்குக்) கூட்டுத்தாபனத்திற்கும் அளிக்கப்பட்ட சிறிய கடன்களின் காரணமாகவே ஏற்பட்டது.

**முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள்**

1962-63ம் ஆண்டின் போதுள்ள முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள், 1961-62ம் ஆண்டின் 146 இலட்சம் ரூபாய்கள் கொண்ட நிகர கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில், 137 இலட்சம் ரூபாய்கள் கொண்ட நிகர வரவைக் காட்டின. உணவு மானிய உண்டியலின் ஒரு பகுதிக்கு நிதியீட்டுவதற்காக 127 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகை கொடுப்பனவாகியிருந்த பொழுதிலும்கூட (திரட்டிய நிதியிலிருந்து இதைப் பெற முடியாது), இவ் வரவு ஏற்பட்டது. 137 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட இந்நிகர வரவு, பிரதானமாக, இலங்கைக்கும் சீனுவுக்குமிடையேயுள்ள வர்த்தகச் சென்மதி உடன்படிக்கையின் கீழ் இலங்கைக்குச் சீனுவுடனுள்ள வர்த்தக மீதியின் திரட்சியில், 203 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஓர் வீழ்ச்சி ஏற்பட்டதன் காரணமாகவே உண்டானது. சீனுவின் கணக்கிற் காணப்படும் இலங்கையின் வரவு மீதி, சீனுவிலிருந்து வரும் இலங்கைக்கான அரிசி இறக்குமதிகளில் ஒரு பகுதிக்கு நிதியீட்டுவதற்காக இவ்வருடத்தின் போது பயன்படுத்தப் பட்டது.

**பணக்குறை நிவர்த்திக்கு நிதியீட்டுதல்**

கீழ்க்காணப்படும் அட்டவணை, நிகரப் பணக்குறை நிவர்த்திக்கப்பட்ட முறையை மூலாதாரப் பாகுபாடு செய்து காட்டுவதுடன், நிகர நாணய விரிவு விளைவுகளையும் முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றது.

**அட்டவணை II எ-5**

**பணக்குறை நிவர்த்திக்கு நிதியீட்டுதல்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1961/62 | | | 1962/63 (தற்காலிகமானவை) | | |
|---|---|---|---|---|---|---|
| 1. நிர்வாகக் கடன்பாடு .. .. .. .. | | | 104·5 | | | −33·8 |
| 2. அந்நிய உதவி (அ) கடன்கள் | | | | | | |
| (i) மொத்தத் தொகை .. | 44·5 | | | 68·7 | | |
| (ii) திருப்பிக் கொடுக்கப்பட்டவை நீக்கி | 6·8 | 37·7 | | 6·3 | 62·4 | |
| (ஆ) நன்கொடைகள் .. .. .. .. | | 18·1 | 55·8 | | 31·1 | 93·5 |
| 3. உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு வங்கிகளல்லாத இதர மூலாதாரங்கள் | | | | | | |
| (அ) மொத்தத் தொகை .. .. .. | 147·3 | | | 193·9 | | |
| (ஆ) ஆழ்நிதிக்கு உதவிய தொகை நீக்கி .. | 37·9 | 109·4 | | 40·4 | 153·5 | |
| 4. உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு—வங்கிகள் .. | | 226·6 | | | | 178·1 |
| 5. அரசாங்கப் பணமிச்சங்களின் வீழ்ச்சி—சய அடையாளம் அதிகரிப்பைக் குறிக்கும் .. .. | | −40·2 | | | | 0·4 |
| 6. நிகரப்பணக் குறை .. .. .. | | 456·1 | | | | 391·7 |
| 7. ஐக்கிய அமெரிக்க உதவியால் எழுந்த இணைக்கு இணையான உள்ளூர் நிதிகளின் வீழ்ச்சி (சய அடையாளம் அதிகரிப்பைக் குறிக்கும்).. .. | | 4·0 | | | | −16·5 |
| 8. வரவு செலவுத்திட்டத்தின் நிகர நாணய விரிவு விளைவு (4 + 5 + 7) .. .. .. .. | | 190·4 | | | | 162·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

ரூபா 4633 இலட்சங்கள் கொண்ட வரவு செலவுத் திட்டக் குறைக்கு, 1962-63ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் நிதியமைச்சரால் அறிவிக்கப்பட்ட நிதியீட்ட மூலாதாரங்களாவன, உள்நாட்டுச் சந்தைக் கடன்பாட்டிலிருந்து ரூபா 1800 இலட்சமும், அந்நிய உதவியிலிருந்து ரூபா 1500 இலட்சமும் ஆகும். இது 1333 இலட்சம் ரூபாய்கள் கொண்ட நிரப்ப முடியாத ஓர் இடைவெளியைக் கொண்டுள்ளது. 1962-63ம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட நிகரப்பணக்குறை 4133 இலட்சம் ரூபாய்களாக இருந்தது.

இப்பகுதியிலே முன்னர் கூறப்பட்ட நியாயங்களின் காரணமாக, உண்மையான நிகரப்பணக்குறை 3917 இலட்சம் ரூபாய்களாக இருந்தது. பணக் குறையின் இந்தக் குறைத்தலும், அத்துடன் உள்நாட்டு வங்கிகளல்லாத மூலங்களிலிருந்து பெற்ற கடன்பாடுகளின் அதிகரிப்பும், வங்கித் தொழில் முறையிலிருந்து பெறும் உள்நாட்டுச் சந்தைக் கடன்பாட்டின் அளவைக் குறைப்பதற்கு உதவின, நாணய விரிவிற் தங்கியிருத்தல் குறைவுற்றமைகூட, பணமிச்சங்களில் 4 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அசட்டை செய்யத்தக்க குறைத்தலிலிருந்தும், அத்துடன் நிர்வாகக் கடன்பாட்டின் கீழ் பெற்ற தொகையில் 338 இலட்சம் ரூபாய்கள் கொண்ட திருப்பிக் கொடுப்பனவிலிருந்தும், ஓர்ந்து கொள்ளத்தக்கதாக இருக்கின்றது.

வரவு செலவுத்திட்டத்தினல் ஏற்பட்ட நிகர நாணய விரிவு விளைவு, ஐக்கிய அமெரிக்க உதவிகளினல் எழுந்த இணைக்கு இணையான உள்ளூர் நிதிகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கும் இடம்விட்டுக் கணித்தபின், 1961-62ம் ஆண்டிற்குரிய 1904 இலட்சம் ரூபாய்களுடனும், 1960-61ம் ஆண்டிற்குரிய 2339 இலட்சம் ரூபாய்களுடனும், 1959-60ம் ஆண்டிற்குரிய 2511 இலட்சம் ரூபாய்களுடனும் ஒப்பிடுகையில், இவ்வாண்டின்போது சென்ற வருடத்திலிருந்ததை விடக் குறைவாக ரூபா 1620 இலட்சங்களாக விளங்கியது.

இந்நிதியாண்டில் வங்கித் தொழில் முறையிலிருந்து பெற்ற கடன்பாடாகிய 1781 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகை, சென்ற நிதியாண்டின்போது பெற்ற தொகையுடன் நன்கு ஒப்பிடக்கூடியதாக உள்ளது. 1962-63ம் நிதியாண்டில் பெற்ற கடன்பாட்டின் மொத்தத் தொகையில், 1562 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகை மகா வங்கியிலிருந்தும், 220 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகை வர்த்தக வங்கிகளிலிருந்தும் கிடைத்தன.

மகாவங்கியாற் பெறப்பட்ட இறைசேரி உண்டியற் கொள்வனவுகள் 1245 இலட்சம் ரூபாய்களாக விளங்குகையில், மகா வங்கியின் முற்பணங்கள் 366 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. வர்த்தக வங்கிகள் இவ்வருடத்தில் 275 இலட்சம் ரூபாய்கள் பெறுமானமுள்ள இறைசேரி உண்டியல்களை, 1961-62ம் ஆண்டின் 420 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், கொள்வனவு செய்தன. வர்த்தக வங்கி இருப்புக்களாகிய ரூபாப்பிணைகள், வரி ஒதுக்குநிதிப் பத்திரங்கள் ஆகிய இரண்டும், முறையே, 54 இலட்சம் ரூபாய்களாலும், 1 இலட்சம் ரூபாய்களாலும் வீழ்ச்சியுற்றன.

இலங்கை பெற்ற மூலதனச் செலவுக்கான அந்நிய உதவிகள், 1961-62ம் ஆண்டின் 626 இலட்சம் ரூபாய்களுடனும், 1960/61ம் ஆண்டின் 296 இலட்ச ரூபாய்களுடனும், 1959-60ம் ஆண்டின் 386 இலட்ச ரூபாய்களுடனும் ஒப்பிடுகையில், 1962-63ம் ஆண்டில் 998 இலட்சம் ரூபாய்களாக விளங்கின. 1962-63, 1961-62, 1960-61, 1959-60 ஆகிய நான்கு வருடங்களின் போதும் அந்நிய கடன் திருப்பிக் கொடுப்பனவுகள், முறையே, 63 இலட்சம் ரூபாய்களாகவும், 68 இலட்சம் ரூபாய்களாகவும், 30 இலட்சம் ரூபாய்களாகவும், 27 இலட்சம் ரூபாய்களாகவும், விளங்கின. அந்நிய உதவி, நன்கொடைகள் ஆகியனவற்றின் நிகர வரவுகள் ஓர் அதிகரிப்பைக் காட்டினும், (இது, இவை போன்ற அந்நிய உதவிகளை அதிகரித்த அளவில் உபயோகப்படுத்துவது இயலுமென்பதைக் குறிக்கின்றது) முதலில் எதிர் பார்த்தவைகளுக்கும் உண்மையிற் தேறியதற்கும் இடையே எவ்வாறெனினும் ஓர் வித்தியாசம் இருக்கவே செய்யும். அந்நிய உதவியைப் பயன்படுத்துவதில் ஏற்படும் ஓர் குறைவு, உதவியின் வரவு மூலதனச் செலவின் தொகைக்கு நிகராகக் கட்டுண்டிருக்கும் பட்சத்தில், பணக்குறை நிவர்த்திக்கு

நிதியீட்டுவதிற் சிறு வித்தியாசத்தையே காட்டும். எனினும், மூலதன ஆக்கத்தினதும், பொருளாதார வளர்ச்சியினதும் அடிப்படையில் நோக்கின், அந்நிய உதவியைக் குறைவாகப் பயன்படுத்துவது கவலைக்கிடமான ஓர் விடயமாகும். 1962-63ம் ஆண்டிற் கிடைத்த அந்நிய உதவிகளின் விபரங்கள் பின்வருமாறு:—

## அட்டவணை II எ-6

### 1962/63ம் ஆண்டிற் பெற்ற அந்நிய உதவிகள்

கடன்கள்: பத்து இலட்சம் ரூபாய்களில்

| | பெறப்பட்ட தொகை | திருப்பிக் கொடுக்கப் பட்ட தொகை | வருடத்தின் போது நிகர வரவு |
|---|---|---|---|
| ச.பு.அ.வ. .. .. .. | 25·3 | 4·1 | 21·2 |
| கனடா .. .. .. | 2·0 | 1·2 | 0·8 |
| பிரிட்டன் .. .. .. | 12·0 | 0·1 | 11·9 |
| ஐக்கிய அமெரிக்கா .. .. .. | 0·2 | 0·9 | -0·7 |
| ரூசியா .. .. .. | 13·5 | — | 13·5 |
| மேற்கு ஜெர்மனி .. .. .. | 11·5 | — | 11·5 |
| யூகோஸ்லேவியா .. .. .. | 4·3 | — | 4·3 |
| | 68·7 | 6·3 | 62·4 |

**நன்கொடைகள்:**

| | | | |
|---|---|---|---|
| கொழும்புத்திட்டம்: | | | |
| (1) அவுஸ்திரேலியா .. .. | 2·5 | | |
| (2) கனடா .. .. .. | 5·7 | | |
| (3) நியுசிலாந்து .. .. | — | | |
| | | 8·2 | |
| சீனு .. .. .. .. .. | | 19·7 | |
| ஐக்கிய அமெரிக்கா .. .. .. | | 0·9 | |
| மேற்கு ஜெர்மனி .. .. .. | | 2·3 | |
| | | | 31·1 |
| கடன்கள், நன்கொடைகளின் மொத்தம் | | | 93·5 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

1962-63ம் ஆண்டுக்கான வங்கிகளல்லாத மூலங்களிலிருந்து பெற்ற நிகர சந்தைக் கடன்பாட்டுத் தொகையான 1535 இலட்சம் ரூபாய்கள், 1961-62ம் ஆண்டுக்கான தொகையைவிடச் சீர்திருந்தியவையாகும். எனினும் இவை, 1960-61ம் ஆண்டிற் பெறப்பட்ட தொகையாகிய 1652 இலட்சம் ரூபாய்களை விடக் குறைந்தவையாகும். சேமிப்பு நிலையங்களும், ஊழியர் சேமநிதியும், காப்புறுதி நிதிகளும், ஏனைய கூட்டு நிலையங்களும், கூடுதலாகக் காணப்படும் மொத்தத்திலே, தமது உதவுதொகைகளின் பங்கைச் சீர் திருத்துவதற்குக் கருவியாக அமைந்தன. 1962-63ம் ஆண்டில் பொதுப்படு கடனில் ஏற்பட்ட வளர்ச்சியை விபரிக்கும் பிரிவின் கீழ், உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடும் அத்துடன் வருடங்களுக்கிடையே அவற்றில் ஏற்பட்ட மாற்றங்களும் பற்றிய ஓர் பாகுபாடு தரப்பட்டிருக்கிறது.

கீழ்க்காணப்படும் அட்டவணை, அரசாங்கப் பிணைகளுக்கான (இறைசேரி உண்டியல்களும், வரி ஒதுக்குநிதிப் பத்திரங்களும் உட்பட) உதவு தொகைகளைப் பிரதான முதலீட்டக்காரரின் தொகுதிகளின்படி பாகுபடுத்திக் காட்டுகின்றது.

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1961/62 | 1962/63 | நிகர மாற்றம் |
|---|---|---|---|
| 1. சேமிப்பு நிலையங்கள் .. .. .. | 12·5 | 14·3 | 1·8 |
| 2. ஊழியர் சேமநிதி .. .. .. | 59·4 | 61·7 | 2·3 |
| 3. சேமநிதிகளும், ஓய்வுச் சம்பளநிதிகளும் .. .. | 25·0 | 31·2 | 6·2 |
| 4. காப்புறுதி நிதிகள்* .. .. .. | 10·1 | 22·4 | 12·3 |
| 5. ஏனைய கூட்டுநிலையங்கள் .. .. .. | –7·4 | 5·0 | 12·4 |
| 6. இதர சங்கங்களும் நிலையங்களும் .. .. .. | –1·4 | 0·1 | 1·5 |
| 7. தனியாட்கள் .. .. .. | 1·7 | 0·1 | –1·6 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*காப்புறுதிக் கூட்டுத்தாபனங்களால் அளிக்கப்பட்ட உதவு தொகைகளும் உட்படும்.

**பொதுப்படுகடன்:**—உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஏற்பட்ட பொதுப்படுகடன் சம்பந்தமான விபரங்கள், பின்னிணைப்பு IIல் உள்ள 23ம் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளன. கடந்த ஐந்து நிதியாண்டுகளின் ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் இருந்த மொத்தப் பொதுப்படுகடன் தொகைகள் (உள்நாட்டினதும், வெளிநாட்டினதும்) கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### அட்டவணை II எ-7
### மொத்தப் பொதுப்படுகடன்(1)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| புரட்டாதி முடிவில் | மொத்தக்கடன் | நிகர கடன் (ஆழ்நிதியின் பெறுமானம் நீக்கி) |
|---|---|---|
| 1959 .. .. .. | 1,837·0 | 1,524·7 |
| 1960 .. .. .. | 2,230·4 | 1,912·8 |
| 1961 .. .. .. | 2,651·0 | 2,332·7 |
| 1962 .. .. .. | 3,037·8 | 2,686·1 |
| 1963 .. .. .. | 3,437·3 | 3,065·4 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

1962-63ம் நிதியாண்டின்போது மொத்தக் கடன், நிகரக் கடன் ஆகியனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புகள், முறையே, 3995 இலட்சம் ரூபாய்களாகவும், 3793 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தன. சென்ற நிதியாண்டிற்கான இவற்றுடன் தொடர்புள்ள எண்தொகைகள், முறையே, 3868 இலட்சம் ரூபாய்களாகவும், 3534 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தன. மொத்தக் கடனில் ஏற்பட்ட 3995 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பு, ரூபாப் பிணைகளில் உண்டான 1683 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பையும், இறைசேரி உண்டியல்களில் உண்டான 1250 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பையும், வரி ஒதுக்குநிதிப் பத்திரங்களில் உண்டான 63 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பையும், அந்நிய கடன்களில் உண்டான 630 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பையும் கொண்டிருந்தது. 1961/62ம் ஆண்டின் முற்பணத்திற்கான நிகர திருப்பிக் கொடுப்பனவாகிய 209 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், மகாவங்கி முற்பணங்கள், இவ்வருடத்தில் 369 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன.

(1) 1963ம் ஆண்டு புரட்டாதி முடிவில் உள்ளபடியான, இப்பொதுப்படுகடன் எண்தொகைகள், 750 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன் முறிகளையும், 433 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தேசிய ஈட்டு வங்கித் தொகுதிக் கடன் முறிகளையும் நீக்குகின்றன.

**உள்நாட்டுக் கடன்:**—*1962-63ம் நிதியாண்டின் இறுதியிலுள்ளபடியான மொத்த உள்நாட்டுக் கடன், 30302 இலட்சம் ரூபாய்களாக இருந்தது. 1962-63ம் நிதியாண்டின் இறுதியிலுள்ளபடியான உள்நாட்டுக் கடனின் அமைப்பு, ரூபாப்பிணைகளில் 16836 இலட்சம் ரூபாய்களையும், இறைசேரி உண்டியல்களில் 11250 இலட்சம் ரூபாய்களையும், வரி ஒதுக்குநிதிப் பத்திரங்களில் 191 இலட்சம் ரூபாய்களையும், மகாவங்கி முற்பணங்களில் 2025 இலட்சம் ரூபாய்களையும் கொண்டு விளங்கியது. கீழ்க்காணப்படும் அட்டவணை உள்நாட்டுப் பொதுப்படுகடனின் அமைப்பிலுள்ள மாற்றத்தின் விபரங்களை, 1961-62ம் ஆண்டிலிருந்தவற்றுடன் ஒப்பிட்டுக்காட்டுகின்றது.*

**உள்நாட்டுப் பொதுப்படுகடனின் அமைப்பு**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| புரட்டாதி முடிவில் உள்ளபடி | ரூபாக்கடன்கள் | | | இறை சேரி உண்டியல்கள் | வரி ஒதுக்கு நிதிப் பத்திரங்கள் | மகா வங்கி முற்பணங்கள் (3) | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த | ஆழ்நிதிகள் (2) | நிகர | | | | மொத்த | நிகர |
| 1962 .. .. .. | 1,515·3 | 263·9 | 1,251·5 | 1,000·0 | 12·8 | 165·6 | 2,693·7 | 2,429·9 |
| 1963 .. .. .. | 1,683·6 | 276·3 | 1,407·3 | 1,125·0 | 19·1 | 202·5 | 3,030·2 | 2,753·9 |
| மாற்றம் (1) .. .. | +168·3 | +12·4 | +155·8 | +125·0 | +6·3 | +36·9 | +336·5 | +324·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

(1) சக அடையாளம் அதிகரிப்பைக் குறிக்கும்.
(2) ஆழ்நிதிகளுக்காக வைத்திருந்த முதலீட்டப் பொருள்களின் சந்தைப் பெறுமானத்தைக் குறிக்கும் (துணையான ஆழ்நிதிகளும் உட்படும்).
(3) 395 இலட்சம் ரூபாய்கள் கொண்ட விசேட கடன்களும் உட்படும்.

**ரூபாப் பிணைகள்:**—*கீழ்க்காணப்படும் அட்டவணை, கடந்த 5 நிதியாண்டுகளின்போது திரட்டப்பட்டதும் தீர்க்கப்பட்டதுமான கடன்களின் தொகைகளைக் காட்டுகின்றது.*

**அட்டவணை II எ-8**

ரூபாய்களில்

| நிதி வருடம் | திரட்டப்பட்ட கடன்கள் | தீர்க்கப்பட்ட கடன்கள் |
|---|---|---|
| 1958/59 .. .. .. | 12,04,16,800 | 3,50,25,200 |
| 1959/60 .. .. .. | 19,50,00,000 | 5,52,39,200 |
| 1960/61 .. .. .. | 26,95,83,200 | 8,97,48,800 |
| 1961/62 .. .. .. | 19,36,99,600 | 7,50,00,000 |
| 1962/63 .. .. .. | 22,13,25,700 | 5,30,81,000 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*1962-63ம் நிதியாண்டின்போது வெளியிடப்பட்ட 2213 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ரூபாக்கடனில் இரண்டு கடன்கள் 163 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட புதுப்பித்து மாற்றிய கடன்களாக இருக்கையில், மொத்தமாக 2050 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட எஞ்சிய பத்துக் கடன்களும் பணவெளியீடுகளாக உள்ளன. 163 இலட்சம் ரூபாய்களைக் கொண்டு விளங்குகின்ற $3\frac{1}{2}$ சதவீத வட்டிக்குரிய 1968-70க்கான புதுப்பித்து மாற்றிய கடனும் $4\frac{1}{4}$ சதவீத வட்டிக்குரிய 1984-88க்கான புதுப்பித்து மாற்றிய கடனும், 1963ம் ஆண்டு மாசி மாதத்தில் முற்றுப் பெற்ற 163 இலட்சம் ரூபாய்களைக்கொண்ட $2\frac{1}{2}$ சதவீத வட்டிக்குரிய 1961-63க் கடனில் ஒரு பகுதிக்கு, மாற்றுதல் முறையாக வெளியிடப்பட்டன. $3\frac{1}{2}$ சதவீத வட்டிக்குரிய 1968-70க்கான புதுப்பித்து மாற்றிய கடனின் பங்குமுறிகளுக்கு முதல் இறுக்கும் வகையில், முற்றுப்பெறும் கடனின் பங்கு முறிகளில் 108 இலட்சம் ரூபாய்கள் பெறுமானமுள்ள பங்குமுறிகள் தரப்பட்டன. எஞ்சிய 55 இலட்சம் ரூபாய்களும் பணமாகத் தரப்பட்டன. இவற்றில் 52 இலட்சம் ரூபாய்கள் $3\frac{1}{2}$ சதவீத வட்டிக்குரிய 1968-70க்கான புதுப்பித்து மாற்றிய கடனிலும், 3 இலட்சம் ரூபாய்கள் $4\frac{1}{4}$ சதவீத வட்டிக்குரிய 1984-88க்கான புதுப்பித்து மாற்றிய*

கடனிலும் சேர்க்கப்பட்டன. ஏனைய பத்துக்கடன் வெளியீடுகளில், எட்டுக் கடன் வெளியீடுகள் பணத்திற்காக மட்டும் விடப்பட்டன. இவை, 1962ம் ஆண்டு ஐப்பசி-கார்த்திகை மாதங்களில் வெளியிடப்பட்ட $3\frac{1}{2}$ சதவீத வட்டிக்குரிய 1967-69 கடனும் $4\frac{1}{4}$ சதவீத வட்டிக்குரிய 1983-87 ''எப்'' தொடர்கடனுமாகிய இரண்டும், 1962ம் ஆண்டு மார்கழி மாதத்தில் வெளியிடப்பட்ட $4\frac{1}{4}$ சதவீத வட்டிக்குரிய 1983-87 ''எச்'' தொடர்கடன், 1963ம் ஆண்டு மாசி மாதத்தில் வெளியிடப்பட்ட $4\frac{1}{4}$ சதவீத வட்டிக்குரிய 1984-88 ''பீ'' தொடர்கடன், 1963ம் ஆண்டு பங்குனி மாதத்தில் வெளியிடப்பட்ட $4\frac{1}{4}$ சதவீத வட்டிக்குரிய 1984-88 ''ஸி'' தொடர்கடன், 1963ம் ஆண்டு ஆனி மாதத்தில் வெளியிடப்பட்ட $4\frac{1}{2}$ சதவீத வட்டிக்குரிய 1984-88 கடன், 1963ம் ஆண்டு ஆடி மாதத்தில் வெளியிடப்பட்ட $4\frac{1}{2}$ சதவீத வட்டிக்குரிய 1984-88 ''பீ'' தொடர்கடன், 1963ம் ஆண்டு புரட்டாதி மாதத்தில் வெளியிடப்பட்ட $4\frac{1}{2}$ சதவீத வட்டிக்குரிய 1984-88 ''ஸி'' தொடர்கடன், ஆகியனவுமாகும்.

1962ம் ஆண்டு கார்த்திகை மாதம் வெளியிடப்பட்ட $4\frac{1}{4}$ சதவீத வட்டிக்குரிய 1983-87 ''ஜீ'' தொடர்கடனினதும், $3\frac{1}{2}$ சதவீத வட்டிக்குரிய 1967-69 ''பீ'' தொடர்கடனினதும் பங்கு முறிகளுக்கு முதல் இறுக்கும் வகையில், இவ்வருடத்தில் முற்றுப் பெறுகின்ற $3\frac{1}{2}$ சதவீத வட்டிக்குரிய 1957-1962 கடனின் பங்கு முறிகளில், முறையே, 50 இலட்சம் ரூபாய்களும், 94 இலட்சம் ரூபாய்களும் பெறுமானமுள்ள பங்குமுறிகள் தரப்பட்டன. இந்த வெளியீடுகள் அனைத்தினதும் மொத்தத் தொகையான 2213 இலட்சம் ரூபாய்களும் முற்றாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இக் கடன்களுக்கான பணம் எந்தெந்த மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்டது என்ற விபரங்கள், அட்டவணை II எ-9ற் கொடுக்கப்பட்டுள்ளன.

முதலீட்டக்காரர்கள்:—அரசாங்கப் பிணைகளில் செய்யப்பட்ட ஒதுக்கல்களின் பாகுபாட்டைத் தருகின்ற அட்டவணை II எ-9, வெளியிடப்பட்ட மொத்தக் கடன்களில் ஊழியர் சேமநிதியானது 1961-62ம் ஆண்டில் அது பெற்ற கடனாகிய 540 இலட்சம் ரூபாய்களுடன் (27.9%) ஒப்பிடுகையில் இவ்வருடம் அது 678 இலட்சம் ரூபாய்களை அல்லது 30.6 சதவீதத்தைப் பெற்றதென்பதைக் காட்டுகின்றது. வெளியிடப்பட்ட மொத்தக் கடன்களில், 1962-63ல் வெளியிடப்பட்ட எஞ்சிய 1530 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட கடன்கள், பின்வருமாறு பெறப்பட்டன: ஊழியர் சேமநிதி அல்லாத ''நம்பிக்கைச் சொத்துக்கள், சேமநிதிகள், உபகாரச் சம்பள நிதிகள்'' என்ற பாகுபாட்டின் கீழ் வருபவர்கள் மொத்தக் கடன்களில் 16.5 சதவீதத்தையும், ஆழ்நிதிகள் 16.4 சதவீதத்தையும் பெற்றிருக்கும் போது, காப்புறுதிக் கூட்டுநிலையங்கள், அரசாங்க உடமையுள்ள காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் உட்பட, மொத்தக்கடன்களில் 11.9 சதவீதத்திற்கு வகை கூறின. வர்த்தக வங்கிகளும், சேமிப்பு நிலையங்களும் மொத்தக் கடனில், முறையே, 11.5 சதவீதத்தையும் 7.8 சதவீதத்தையும் கொடுத்தன. 1962ம் ஆண்டுக்கான மகாவங்கியின் வருடாந்த அறிக்கை, 1961-62ம் ஆண்டின்போது வங்கிகளல்லாத முதலீட்டக்காரர்கள் மூலத்திலிருக்கின்ற அரசாங்கப் பிணைகளுக்கான கேள்வி, வீழ்ச்சியுற்றிருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தது. ஆயினும், 1962-63ம் ஆண்டின் அநுபவம், 1961-62ம் ஆண்டிலிருந்ததைவிட ஓர் சீர்திருத்தத்தைக் காட்டிற்று. வர்த்தக வங்கிகளின் தனிப்பட்டோருக்கான தவணை வைப்புக்களும் சேமிப்பு வைப்புக்களும், 1961-62ம் ஆண்டின் 426 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், இவ்வருடம் 648 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்த பொழுதிலும், வங்கிகளல்லாத முதலீட்டக்காரர்களால் அரசாங்கப் பிணைகள், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இவ்வருடத்தில் அதிகமாகப் பெறப்பட்டன.

பின்வரும் ஓர் அட்டவணை, 1961-62ம் ஆண்டிலும், 1962-63ம் ஆண்டிலும் அரசாங்கப் பிணைகளில் செய்யப்பட்ட ஒதுக்கல்களைப் பாகுபடுத்தியும், ஒப்பிட்டும் காட்டுகின்றது.

## அட்டவணை II எ-9

### அரசாங்கப் பிணைகளுக்கெதிராகப் பெற்ற ஒப்பப்பண ஒதுக்கல்களின் பாகுபாடு 1962-63

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 3½% கடன், 1967–69 | 4¼% கடன், 1983–87 'எப்' தொடர் | 4¼% கடன், 1983–87 'ஜீ' தொடர் (1) | 3½% கடன், 1967–69 'பீ' தொடர் (1) | 4¼% கடன், 1983–87 'எச்' தொடர் | புதுப்பித்து மாற்றிய கடன் (2) 3½% கடன், 1968-70 | | புதுப்பித்து மாற்றிய கடன் (2) 4¼% கடன், 1984-88 | | 4¼% கடன், 1984–88 'பீ' தொடர் | 4¼% கடன், 1984–88 'ஸி' தொடர் | 4½% கடன், 1984–88 | 4½% கடன், 1984–88 'பீ' தொடர் | 4½% கடன், 1984–88 'ஸி' தொடர் | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கொடுக்கப் பட்ட பங்கு முறிகள் | பணம் | கொடுக்கப் பட்ட பங்கு முறிகள் | பணம் | | | | | | தொகை | சத வீதம் |
| வர்த்தக வங்கிகள் .. .. | 5·0 | — | 0·3 | 6·8 | — | 10·7 | 2·6 | — | ... | — | — | — | — | — | 25·4 | 11·5 |
| கூட்டுறவு வங்கிகள் .. .. | — | — | — | — | 0·3 | — | — | — | — | — | — | — | — | — | 0·3 | 0·1 |
| சேமிப்பு நிலையங்கள் .. .. | — | 2·0 | 3·0 | — | 0·5 | — | — | — | — | 2·0 | 1·0 | 3·8 | 2·0 | 3·0 | 17·3 | 7·8 |
| ஆழ் நிதிகள் .. .. .. | — | 0·4 | — | — | 6·2 | — | — | — | — | 8·3 | 4·8 | 2·0 | 12·2 | 2·5 | 36·4 | 16·4 |
| திணைக்கள நிதிகளும், ஏனைய அரச கரும நிதிகளும் .. .. | — | 0·6 | 1·8 | 0·1 | 1·2 | — | — | — | — | ... | 2·7 | 0·8 | 0·2 | 0·1 | 7·5 | 3·4 |
| நம்பிக்கைச் சொத்துக்களும், உபகாரச் சம்பளநிதிகளும், சேமநிதிகளும்: | | | | | | | | | | | | | | | | |
| (1) ஊழியர் சேமநிதி .. .. | — | 15·3 | — | — | 9·1 | — | — | — | — | 9·5 | 5·9 | 12·3 | 6·3 | 9·4 | 67·8 | 30·6 |
| (2) ஏனையவை .. .. .. | 0·5 | 5·7 | 1·1 | 5·0 | 2·2 | — | 1·3 | ... | 0·1 | 2·4 | 6·4 | 6·7 | 3·3 | 1·9 | 36·6 | 16·5 |
| காப்புறுதிக் கூட்டுத்தாபனங்கள் .. | — | 3·0 | 1·0 | — | — | — | — | — | — | 2·5 | 2·5 | 2·2 | — | 1·7 | 12·9 | 5·8 |
| காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் .. | 2·3 | — | — | 3·8 | ... | 0·1 | 1·3 | — | 0·1 | 0·2 | 1·1 | 2·1 | 0·9 | 1·5 | 13·4 | 6·1 |
| இதர கூட்டு நிலையங்கள் .. .. | 0·1 | — | 0·1 | 0·4 | — | — | 0·1 | — | — | 0·1 | — | ... | — | — | 0·8 | 0·4 |
| தனியாட்களும், சங்கங்களும், நிலையங்களும் .. .. .. | 0·1 | 0·1 | 1·1 | 0·5 | 0·5 | — | ... | — | ... | ... | 0·6 | 0·2 | 0·1 | ... | 3·2 | 1·4 |
| மொத்தம் .. .. | 7·9 | 27·1 | 8·4 | 16·6 | 20·0 | 10·8 | 5·2 | ... | 0·3 | 25·0 | 25·0 | 30·0 | 25·0 | 20·0 | 221·3 | 100·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

(1) 4¼ சதவீத வட்டிக்குரிய 1983/87 ''ஜீ'' தொடர் கடனினதும், 3½ சதவீத வட்டிக்குரிய 1967/69 ''பீ'' தொடர்கடனினதும் பங்கு முறிகளுக்கு முதல் இறுக்கும் வகையில், இவ்வருடத்தில் முற்றுப் பெறுகின்ற 3½ சதவீத வட்டிக்குரிய 1957-1962 கடனின் பங்கு முறிகளில், முறையே, 50 இலட்சம் ரூபாய்களும், 94 இலட்சம் ரூபாய்களும் பெறுமானமுள்ள பங்கு முறிகள் தரப்பட்டன.

(2) 1963ம் ஆண்டு தைமாதத்தில் முற்றுப்பெற்ற 163 இலட்சம் ரூபாய்கள் கொண்ட 2½ சதவீத வட்டிக்குரிய 1961/63 கடனை மாற்றுதல் முறையாக வெளியிட்ட கடன்கள்.

**1961-62ம் ஆண்டிலும் 1962-63ம் ஆண்டிலும், அரசாங்கப் பிணைகளில் செய்யப்பட்ட ஒதுக்கல்களின் ஒப்பீடும் பாகுபாடும்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1961/62 | | 1962/63 | | மாற்றம் |
|---|---|---|---|---|---|
| | தொகை | % | தொகை | % | தொகை |
| வர்த்தக வங்கிகள் .. .. .. | 63·2 | 32·6 | 25·4 | 11·5 | –37·8 |
| கூட்டுறவு மாகாண வங்கிகள் .. .. | 0·6 | 0·3 | 0·3 | 0·1 | – 0·3 |
| சேமிப்பு நிலையங்கள் .. .. .. | 14·0 | 7·2 | 17·3 | 7·8 | + 3·3 |
| ஆழ்நிதிகள் .. .. .. | 16·4 | 8·5 | 36·4 | 16·4 | +20·0 |
| திணைக்கள நிதிகளும், ஏனைய அரசகரும நிதிகளும் .. .. .. .. | 6·0 | 3·1 | 7·5 | 3·4 | + 1·5 |
| நம்பிக்கைச் சொத்துக்களும், சேமநிதிகளும் உபகாரச் சம்பள நிதிகளும் | | | | | |
| (1) ஊழியர் சேமநிதி .. .. | 54·0 | 27·9 | 67·8 | 30·6 | +13·8 |
| (2) ஏனையவை .. .. .. | 26·7 | 13·8 | 36·6 | 16·5 | + 9·9 |
| காப்புறுதி நிதிகள் .. .. .. | 10·3 | 5·3 | 26·3* | 11·9 | +16·0 |
| ஏனைய கூட்டுநிலையங்கள் .. .. | 0·2 | 0·1 | 0·8 | 0·4 | + 0·6 |
| தனியாட்களும், சங்கங்களும் நிலையங்களும் .. | 2·7 | 1·4 | 3·2 | 1·4 | + 0·5 |
| மொத்தம் | 193·7 | 100·0 | 221·3 | 100·0 | +27·6 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*காப்புறுதிக் கூட்டுநிலையங்களாற் பெற்ற 129 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகையையும் (இது மொத்தத்தில் 5·8 சதவீதமாகும்) உட்படுத்தும்.

சக அடையாளம் அதிகரிப்பைக் குறிக்கும்.

சய அடையாளம் குறைவைக் குறிக்கும்.

**முதிர்ச்சியும், வீதப்பாகுபாடும்:**—முதிர்ச்சி அடிப்படையிலான பாகுபாட்டின்படி, 21 வருடங்களிலிருந்து 25 வருடங்கள் வரைக்குமான 1810 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட ஒன்பது கடன்கள் வெளியிடப்பட்டன. இக்கடன்களில் முதல் ஆறு கடன்களும் வருடத்திற்கு $4\frac{1}{4}$ சதவீத வட்டியுடன் வெளியிடப்பட்டன. இதன் பின்னர் இவற்றின் வட்டி வீதம் $\frac{1}{4}$ சதவீதத்தால் உயர்த்தப்பட்டது. இவ்வுயர்வுற்ற வட்டியுடன் கூடிய மூன்று கடன் வெளியீடுகளில் முதலாவது வெளியீடு, 1963ம் ஆண்டு ஆனி மாதத்தில் வெளியிடப்பட்டது. இக்கடன்களின் வட்டி வீதங்கள், கடந்த நிதியாண்டில் வெளியிடப்பட்ட இதேயளவு முதிர்ச்சித் தவணையைக் கொண்ட கடன்களுக்கான $4\frac{1}{4}$ சதவீத வட்டியுடன் ஒப்பிடற்குரியன. 400 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட மூன்று கடன்கள், 5 வருடத்திலிருந்து 7 வருடத்திற்கான கடன்களாக வருடத்திற்கு $3\frac{1}{2}$ சதவீத வட்டியுடன் வெளியிடப்பட்டன. இக்கடன்களின் மீதுள்ள வட்டி வீதம், ஏற்கெனவே 1962ம் ஆண்டு பங்குனி மாதத்தில், வருடத்திற்கு $3\frac{1}{4}$ சதவீதத்திலிருந்து $3\frac{1}{2}$ சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டிருந்தது.

**இறைசேரி உண்டியல்கள்:**—அண்மை வருடங்களிற் காணப்பட்ட போக்கிற்கு முரணாக, இறைசேரி உண்டியல்களின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பு, 1962-63ம் ஆண்டின்போதுள்ள மொத்த உள்நாட்டுப் பொதுப்படு கடனின் அதிகரிப்பில் மிகப் பெரிய பங்கினை உடையதாக அமைந்திருக்கவில்லை. மொத்தக் கடனின் அதிகரிப்பில் பெரிய பங்குடையதாக அமைந்திருக்கும் அதன் நிலைமை, ரூபாப் பிணைகளால் நிலை பெயர்க்கப்பட்டது. நிதியாண்டுத் தொடக்கமாகிய 1-10-1962ல் வெளியிடப்பட்டதும் நிலுவையில் நின்றதுமான இறைசேரி உண்டியல்களின் அளவு, 10,000 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. இறைசேரி உண்டியல்களின் சட்டபூர்வமான எல்லைகூட, 10,000 இலட்சம் ரூபாய்களாகவே இருந்தது. 21-3-1963ல் பாராளுமன்றத்தின் பிரேரணையால் இவ் இறைசேரி உண்டியல்களின் சட்ட

பூர்வமான எல்லை, 1,500 இலட்சம் ரூபாய்களால் 11,500 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரிக்கப்பட்டது. நிதியாண்டின் முடிவாகிய 30-9-63ல் வெளியிடப்பட்டதும், நிலுவையில் நின்றதுமான இறைசேரி உண்டியல்களின் தொகை, 11,250 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. இது, இந்நிதியாண்டின்போது ஏற்பட்ட 1,250 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றது. ஆகவே, நிதியாண்டின் முடிவின்போது 250 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட தொகை, இறைசேரி உண்டியல் வெளியீடுகளின் இயலுமான எல்லைக்குப் பயன்படுத்தப்படாத மிச்சமாக இருந்தது.

மகாவங்கியினது இருப்புக்களாகிய இறைசேரி உண்டியல்கள், 30-9-62ல் இருந்த 8,644 இலட்சம் ரூபாய்களுடனும், 1961ம் ஆண்டு புரட்டாதி முடிவிலிருந்த 6,800 இலட்சம் ரூபாய்களுடனும், ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டு புரட்டாதி மாத முடிவில் 9889 இலட்சம் ரூபாய்களாக விளங்கின.

**அந்நிய கடன்:**—நிகர அந்நிய கடனில் 630 இலட்சம் ரூபாய்களால்* ஏற்பட்ட அதிகரிப்பு, கீழ்க்காணப்படும் அட்டவணையிற் பாகுபடுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை II எ-10**

**அந்நிய கடன்கள்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1962/63ல் ஏற்பட்ட நிகர அதிகரிப்பு | 1963, புரட்டாதி 30ல் உள்ளபடியான நிகர பொறுப்பு |
|---|---|---|
| சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கி .. .. | 21·2 | 123·3 |
| கனடிய கடன்கள் .. .. .. .. | 0·7 | 9·1 |
| சீனக் கடன் .. .. .. .. | — | 9·2 |
| பிரித்தானிய கொடுகடன் வசதி .. .. .. | 11·9 | 15·3 |
| பிரித்தானிய ஸ்டேர்லிங் பிணைகள் .. .. .. | — | 167·9(1) |
| அபிவிருத்திக் கடனுதவி நிதித்தாபனம் (ஐக்கிய அமெரிக்க) | – 0·7 | 12·6 |
| சர்வதேச கூட்டுதவி ஆட்சித்தாபனம் (ஐக்கிய அமெரிக்க) | ... | 31·6 |
| ரூசியக் கடன் .. .. .. .. .. | 14·1 | 22·3 |
| மேற்கு ஜெர்மனிக் கடன் .. .. .. | 11·5 | 11·5 |
| யூகோஸ்லேவியாக் கடன் .. .. .. | 4·3 | 4·3 |
| மொத்தம் .. .. .. .. | 63·0 | 407·1(2) |

மூலம்: இலங்கை மகா வங்கி.

**ஆழ்நிதிகள்:**—பொதுப்படுகடன்களை மீட்பதற்காக உள்ள ஆழ்நிதிகளின் பெறுமானம், 1962-63ம் நிதியாண்டின் இறுதியில் 3719 இலட்சம் ரூபாய்களாக இருந்தது. 1961-62ம் நிதியாண்டின் இறுதிக்குரிய தொகையுடன் ஒப்பிடுகையில், இது, 201 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஓர் அதிகரிப்பைக் காட்டுகின்றது. கடன்களைத் திருப்பிக் கொடுக்கும் பொருட்டு 367 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஓர் தொகை ஆழ்நிதியிலிருந்து எடுக்கப்பட்டது. இவ்வாண்டில், வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஆழ்நிதிக்கு உதவிய தொகை

1. இப்பொறுப்புக்கெதிராக, ஸ்டேர்லிங் பிணைகளை மீட்பதற்காக வைத்திருக்கப்பட்ட ஆழ்நிதிகள் 956 இலட்சம் ரூபாய்களாக விளங்கின. ஆகவே நிகர பொறுப்பு 723 இலட்சம் ரூபாய்களாக விளங்குகின்றது.

2. நிகர பொறுப்பின் மொத்தத் தொகை, பிரித்தானிய ஸ்டேர்லிங் பிணைகள் ஆழ்நிதிக்காகச் சீராக்கப்பட்டபின், 3115 இலட்சம் ரூபாய்களாக விளங்குகின்றது.

*மேற்காணப்படும் தொகை, கணக்கு ஏடுகளில் பதிதல் முடிவுற்ற பின்னரே கடன் பெறப்பட்ட அறிவிப்புக் கிடைத்தமையால், 1961-62ம் ஆண்டின் போது கணக்கில் எடுக்கப்படாத ரூசியக் கடனாகிய 5 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வரவை, உட்படுத்தும்.

404 இலட்சம் ரூபாய்களாகவும், ஆழ்நிதிகளின் முதலீடுகளிலிருந்து சம்பாதிக்கப்பட்ட வட்டி வருமானங்கள் 133 இலட்சம் ரூபாய்களாகவும் அமைந்தன. ஆழ்நிதிகளின் உடமைகளான முதலீடுகளின் சந்தைப் பெறுமானம், 31 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட ஓர் அதிகரிப்பைக் காட்டுகின்றது.

அரசாங்க ஆதிக்கமுள்ள நிலையங்களின் கடன்பாடு:—1962-63ம ஆண்டில் தேசிய வீடமைப்புத் தொகுதிக்கடன் முறிகளின் 50 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வெளியீடொன்று விடப்பட்டது. அத்துடன் இவ் வருடம் அரசாங்கம் 150 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஒரு நேரடிக் கடனைத் தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கு வழங்கியது. எனவே, தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கு அரசாங்கம் இதுவரை வழங்கிய நேரடிக் கடன்களின் மொத்தம் 550 இலட்சம் ரூபாய்களாகும். வெளியிடப்பட்டதும், நிலுவையில் வெளிநின்றதுமான தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன் முறிகளின் மொத்தத் தொகை, 750 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரிக்கப்பட்டது. தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன் முறிகளை மீழ்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆழ்நிதிகளின் உண்மையான சந்தைப் பெறுமானம், இந் நிதியாண்டின் முடிவில் 190 இலட்சம் ரூபாய்களாக இருந்தது.

1962-63ம் ஆண்டிற் தேசிய ஈட்டு வங்கித் தொகுதிக் கடன் முறிகள் ஒன்றும் வெளியிடப்படவில்லை. தனது தொழிற்பாடுகளை நடாத்துவதற்காக இவ்வங்கி தொடர்ந்தும் வர்த்தக வங்கிகளிலிருந்து கிடைக்கக்கூடிய மேலதிகப்பற்று வசதிகளை நாடியது. தேசிய ஈட்டு வங்கி அதிகாரச்சட்டத்தின் 35-ம் பிரிவின் கீழ், இவ்வங்கி பெறக்கூடிய மொத்தக் கடன்களின் வரையறுக்கப்பட்ட எல்லை, 1962-63ம் நிதியாண்டின் இறுதியில், 650 இலட்சம் ரூபாய்களாக இருந்தது. $2\frac{1}{2}$ சதவீத வட்டிக்குரிய 1961-63க்கான, 25 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட தேசிய ஈட்டு வங்கித் தொகுதிக் கடன் முறிகள் 1-2-1963ல் திருப்பிக் கொடுக்கப்பட்டன. 1963ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30-ம் திகதியில் உள்ளபடி, இவ்வங்கியின் தொகுதிக்கடன் முறி நிலுவைகளின் மொத்தம் 433 இலட்சம் ரூபாய்களாகவும், உத்தரவாதமளிக்கப்பட்ட மேலதிகப் பற்றுக்களின் நிலுவை மொத்தம் 110 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தன.

**1963-64க்கான வரவு செலவுத்திட்டம்**

பாராளுமன்றத்தினல் அங்கீகரிக்கப்பட்டபடி, 1963-64ம் ஆண்டிற்கான வரவு செலவுகளின் மூலமதிப்பீடுகள் பின்வருமாறு:—

**அட்டவணை II எ-11**

**மூல வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | | |
|---|---|---|
| (அ) மீண்டுவரும் செலவு (வாக்குப்பணங்கள் 1, 2, 4, 6 ஆகியன) .. | 1,790·4 | |
| $2\frac{1}{2}$ சதவீதக்குறைச்செலவை நீக்கி .. .. .. .. | 44·7 | 1745·7 |
| (ஆ) மூலதனச் செலவுகள் (வாக்குப் பணங்கள் 3, 5, 7 ஆகியன) .. .. .. | | 516·4 |
| (இ) மொத்தச் செலவு (அ+ஆ) .. .. .. .. .. .. .. | | 2262·1 |
| (ஈ) அரசிறை (புதியவரிவருமானங்களும் உட்பட) .. .. .. .. .. | | 1787·6 |
| (உ) வரவு செலவுத்திட்டக்குறை (இ-ஈ) .. .. .. .. .. .. | | 474·5 |
| (ஊ) ஆழ்நிதிக்கு உதவிய தொகையும், நேரடியாகத் திருப்பிக் கொடுக்கப்பட்ட பொதுப்படுகடனும் நீக்கி .. .. .. .. .. | | 56·4 |
| (எ) மதிப்பிடப்பட்ட நிகரப்பணக்குறை (உ-ஊ) .. .. .. .. .. | | 418·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

4745 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வரவு செலவுத்திட்டக்குறைக்கு நிதியீட்டுவதற்கான வழிவகைகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன:—

சந்தைக் கடன்பாட்டிலிருந்து 2200 இலட்சம் ரூபாய்களும்,

அந்நிய உதவிகளிலிருந்து 1750 இலட்சம் ரூபாய்களும்,

அரசாங்க முகவர் நிலையங்களிலிருந்து பெறக்கூடிய நிர்வாகக் கடன் பாடுகள் 250 இலட்சம் ரூபாய்களும் ஆக மொத்தம் 4200 இலட்சம் ரூபாய்கள். எஞ்சிய 545 இலட்சம் ரூபாய்களும், அரசாங்கப் பிணைகளுக்கெதிராக வர்த்தக வங்கிகளிடமிருந்து கடன்படுவதன் மூலமாகவும், இறைசேரி உண்டியல்களை வெளியிடுவதன் மூலமாகவும் பெறப்படும்.[1]

**அரசிறை**

*1963-64*ம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த அரசிறை, *17876* இலட்சம் ரூபாய்களாகும். இது வரவு செலவுத்திட்டத்தில் வழிவகுக்கப் பட்ட நிகர வரவுகளாகிய *880* இலட்சம் ரூபாய்களையும் உட்படுத்திய தாகும். *1962-63*ம் ஆண்டின் உண்மையான அரசிறையாகிய *15934* இலட்சம் ரூபாய்களுடன் இதை ஒப்பிடுகையில், நடைமுறை நிதிவருடத்திற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் *1942* இலட்சம் ரூபாய்களைக் கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றன. வரவு செலவுத்திட்டத்தில் வழிவகுக்கப் பட்ட புதிய அரசிறை நடவடிக்கைகளும், இவற்றை முழுவருடத்திலும் செயற்படுத்தும் போது கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் மேலதிகமான அரசிறையும் கீழே தரப்பட்டுள்ளன.

| | | பத்து இலட்சம் ரூபாய்களில் |
|---|---|---|
| 1. | மொத்த விற்பனவு வரிகள் .. .. .. | 40 (2) |
| 2. | அந்நிய செலாவணி வரி .. .. .. | 10 |
| 3. | உயர்ந்த இறக்குமதித் தீர்வைகள் .. .. | 40 |
| 4. | தேசிய லொத்தர் .. .. .. .. | 15 |
| 5. | முத்திரைத் தீர்வைகள் .. .. .. | 4 |
| 6. | பெருந்தோட்டத் தீர்வைகளும், நன்கொடை வரியும் | 2 |
| 7. | பெற்ரேல் .. .. .. .. .. | 2 |
| 8. | கல்ஓயாவிலும், கந்தளாயிலும் தயாரித்த மதுவகைகள் | 6 |
| | மொத்தம் (1லிருந்து 8 வரை) .. .. | 119 |

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு சில வழிவகைகளைப் பூரணமாகச் செயற்படுத்தும்போது அவை *310* இலட்சம் ரூபாய்களைக் கொண்ட வீழ்ச்சியில் முடியும் என எதிர்பார்க்கப்பட்டமை யால், அரசாங்கத்திற்கான நிகர அரசிறை *880* இலட்சம் ரூபாய்களென மதிப்பிடப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவினைக் குறைக்கும் நடவடிக்கை களும், தொகைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

| | | பத்து இலட்சம் ரூபாய்களில் |
|---|---|---|
| 1. | கோதுமைமா விலையில் ஏற்படுத்திய குறைப்பு .. | 20 |
| 2. | ஆடை வகைகளின் மீதான இறக்குமதித் தீர்வைகளின் குறைப்பு | 6 |
| 3. | மோட்டார் மாற்றுறுப்புக்களின் மீதுள்ள இறக்குமதித் தீர்வை யின் குறைப்பு .. .. .. | 3 |
| 4. | மண்ணெண்ணை விலையின் குறைப்பு .. .. | 2 |
| | மொத்தம் (1லிருந்து 4 வரை) .. .. | 31 |

(1) 1963ம் ஆண்டு ஆவணி 1ம் திகதியிற் பாராளுமன்றத்திற் புகுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம், வரவு செலவுத்திட்டத்திற்கு முந்திய வரி வீதங்களின்படி, 5580 இலட்சம் ரூபாய் களைக் கொண்ட ஓர் மொத்த வரவு செலவுத்திட்டக்குறையை எதிர்நோக்கியது. நிகர வரவு செலவுத்திட்டக்குறை, 880 இலட்சம் ரூபாய்கள் கொண்ட புதிய வரி வருமானத்திற் கும் இடம் விட்டு, 4700 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. எனினும், பாராளுமன்றம் 4745 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வரவு செலவுத்திட்டக் குறைக்கே வாக்களித்தது. இதிற் காணப்படும் 45 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பு, மொத்தச் செலவில் உண்டான அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும்.

(2) வரவு செலவுத்திட்ட உரையில், மொத்த விற்பனவு வரிகளிலிருந்து கிடைக்குமெனக் கொடுக்கப்பட்ட வருமானங்களின் மதிப்பீட்டுத் தொகை 400 இலட்சம் ரூபாய்களாகும். ஆனல் பாராளுமன்றம் அங்கீகரித்த மதிப்பீடுகளில், எதிர்பார்க்கப்படும் வருமானம், 450 இலட்சம் ரூபாய்களாக உள்ளது.

**புதிய வரி நடவடிக்கைகள்**

1. வருமான வரி:—குறைந்த வருமானங்கள் பெறுபவர்களின் வரிச் சுமையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு, 1963-64ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் உள்நாட்டு வருமானவரி அதிகாரச் சட்டத்திலே கணிச மான அளவு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. இவை, உழைப்பினுல் உண்டாகும் வருமானத்திற்குச் சலுகை அளிப்பதும், இச்சலுகைகளைத் தன்னுழைப்புகளில் உள்ளவர்களுக்கு நீடிப்பதும், உயர்ந்த மட்ட வருமானங் களில் உள்ள சார்ந்தோருக்கான வரிச் சலுகைகளைக் குறைப்பதும் ஆகும். வரிவிதிக்கும் காரணத்திற்காக வருமானத்தின் தொகைக் கணிப்பிற் புகுத்தப்பட்ட மேலும் முக்கியமான மாற்றங்கள் பின்வருமாறு:—

(அ) அநுமதிப் பங்கு முறையான வரிகளை ஒழிப்பதும், அதன் இடத்தில் புதிய விதமான வரிக்கணிப்பு முறையைப் புகுத்தி அதன்படி வரி விதிக்கப்படக்கூடிய வருமானத்தின் முதல் பிரமாணத் தொகை, குடும்பத்தின் அளவினைப் பொறுத்து வேறுபடக்கூடிய தாக அமைப்பதும், ஆகும். இந்தவரி விதிக்கப்படக்கூடிய முதற் பிரமாணத்தொகை, ரூபா 4,000லிருந்து ரூபா 13,000 வரையு மாகும். இதற்கு 15 சதவீதப்படி வரி விதிக்கப்படும். வரிவிதிக்கப் படத்தக்க வருமானத்தின் அடுத்துள்ள பிரமாணத்தொகைகள், அதேயளவினதாகவும், குடும்பச் சூழ்நிலை வேற்றுமையின்றி எல்லா வரியிறுப்போருக்கும் பொருந்துவனவாகவும் உள்ளன. முன் கூறப்பட்ட வரிவிதிக்கப்படத்தக்க முதற் பிரமாணத் தொகை, தனியாளுக்காயின் 4,000 ரூபாய்களாகவும், கண வனுக்கும் மனைவிக்குமாயின் 7,000 ரூபாய்களாகவும், இருக்கும். ஆகக்கூடுதலாக நான்கு பிள்ளைகளுக்கு அல்லது சார்ந்தோருக்கு, ஒவ்வொரு பிள்ளைக்கும் அல்லது சார்ந்தோருக்கும் 1,500 ரூபாய் கள் மேலதிகமாக விடப்பட்டுள்ளது. எனவே மணமாகிய தம்பதி களுக்கும் நான்கு பிள்ளைகளுக்கும், முதலாவது பிரமாண வரி விதிக்கப்படத்தக்க வருமானம், 13,000 ரூபாய்களாக உள்ளது. 3,000 ரூபாய்களிலிருந்து 6,000 ரூபாய்கள் வரை வருடாந்த வருமானங்களையுடைய 25,000த்திலிருந்து 28,000 வரையிலுள்ள வரியிறுப்போர், இம்மாற்றங்களின் விளைவினுல் வருமான வரி யிலிருந்து பூரணமாக விலக்குப்பெறுவர். 6,000 ரூபாய்களிலிருந்து 15,000 ரூபாய்கள் வரையிலான வருடாந்த வருமானங்களை யுடையவர்களுக்கு வரிச்சலுகைகள் இருக்க வேண்டுமென எதிர் நோக்கப்பட்டிருக்கையில், 15,000 ரூபாய்களிலிருந்து 20,000 ரூபாய்கள் வரையிலான வருடாந்த வருமானங்களையுடையவர் கள் தாம் முன்னர் சுமந்த ஏறக்குறைய அதேயளவான வரிச் சுமையைத் தொடர்ந்தும் ஏற்பார்கள். ரூபா 20,000த்தை கொண்ட வருமான எல்லைக்கு மேல், சார்ந்தவர்களுக்குள்ள வரிச்சலுகைகள் குறைக்கப்பட்டதன் காரணமாக, வரிச்சுமை களில் ஓர் அதிகரிப்பு ஏற்படும்.

(ஆ) உழைப்பு வருமானத்தின் மீது, வருடமொன்றிற்கு 500 ரூபாய்கள் கொண்ட ஓர் வரியில்லா அநுமதித் தொகையை வழங்குதல்.

(இ) ''சார்ந்தோர்'' என்ற சொற்பொருளுக்குள்ள வரைவிலக் கணத்தில், கல்வி நிலையங்களிற் பயிலும் சகோதரர்களும் அத்துடன் கல்யாணமாகாத சகோதரிகளும் உட்படும்படியாக அதைத் திருத்தியமைத்தல்.

(ஈ) தொழிலில் இருக்கும் திருமணமாகாத ஓர் பிள்ளையின் வருமா னத்தை பெற்ருேரின் வருமானத்துடன் கூட்டாமல் விடுதல். ஓர் மனைவியின் தொழில் வருமானம், கணவனின் வருமானத்துடன் கூட்டப்படும். இப்பேர்ப்பட்ட வருமானத்திற்கெதிராக, தொழில் வருமானத்திற்காக உள்ள அநுமதித் தொகையைக் குறைப்பது, அநுமதிக்கப்படத்தக்கதாகும்.

(உ) குடும்பச் சூழ்நிலைகள், பொறுப்புக்கள் என்ற வேற்றுமையின்றி, ஆகக் குறைந்த வரி வீதமாகிய, 3 சதவீதத்தை அல்லது 4 சத வீதத்தைக் கொண்ட வரி அறவீட்டை, ஒழித்தல்.

(ஊ) வருமானத்திற்கு வரிவிதிக்கும் முறையில் ஏற்பட்டிருக்கும் ஏனைய மாற்றங்களில், அரசாங்கப்பிணைகளில் உள்ள முதலீட்டங்களின் மீதான வருமான வரிச் சலுகைகளைத் திருப்பியெடுத்தலும்; விவசாயத்தில் புதிய பெருமளவுத்திட்டப் பொறுப்பேற்றங்களுக்கும், பாற்பண்ணைத் தொழிலுக்கும், கால்நடைப்பண்ணைத் தொழிலுக்கும் வரி சலுகைகளை நீடித்தலும், கைத்தொழில் நிலையங்களிலும், எந்திரத் தொழில் நிலையங்களிலும் தொழில் பயில்பவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக வரிச் சலுகைகள் கொடுத்தலும்; கழிவு பெறக்கூடிய வியாபாரச் சம்பளங்களை வருடமொன்றிற்கு ஒரு ஊழியருக்கு ரூபா 36,000க்கு எல்லைப்படுத்தி வரையறுத்தலும், உட்படும்.

**ஏனைய பிரதான அரசிறை நடவடிக்கைகள்**

**மொத்த விற்பனவு வரி:**—வரி அமைப்பினுள் இரண்டு புதிய வரிகள் புகுத்தப்பட்டுள்ளன[1]. இவை உற்பத்தியாளர்கள் மொத்த விற்பனவு வரி, வர்த்தக மொத்த விற்பனவு வரி என்பனவாகும். உற்பத்தியாளர்கள் மொத்த விற்பனவு வரி, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பல்வகைப்பட்ட நுகர்ச்சிப் பொருட்களின் மீது, 3 சதவீதத்தில் அறவிடப்படவிருக்கின்றது. வர்த்தக மொத்த விற்பனவு வரி, மொத்த விற்பனவில் அரைச்சத வீதத்திற்கு அறவிடப்படுகின்றது. இவ்வரி, சேவைகள் வழங்கும் வர்த்தகங்களும் உட்பட்ட எல்லா வர்த்தகங்களையும், உள்ளடக்கும். பின்வருவன, பொறுப்பிலிருந்து வரி விதிப்பதற்கு விலக்குப் பெற்றுள்ளன. முதன்மையாக, அரிசி, கோதுமைமா, சீனி, பாண், ஏற்றுமதிக்கான பொருட்கள், தவறணைகளிலுள்ள சாராயமும், கள்ளும், பெற்றோல், சிகரெட்டுகள், மண்ணெண்ணை, டீசல் எண்ணையும் ஏனைய எரிபொருட்களும், ஊராய்வு நீக்குமெண்ணெய்கள், ஆகியனவற்றின் மொத்த விற்பனவுகளும்; இவற்றுடன் புத்தகங்கள், பருவவெளியீடுகள், சஞ்சிகைகள் ஆகியனவும். இரண்டாவதாக, வங்கிகள், காப்புறுதிக் கூட்டுநிலையங்கள், வாடகைக் கொள்வனவுக் கூட்டுநிலையங்கள், அட்கு பிடிப்பவர்கள், பணம் கடன் கொடுப்பவர்கள், தரகு முகவர்கள் போன்ற நிதிநிலையங்கள் யாவும். மூன்றாவதாக, உயர்தொழில் வர்த்தகங்களுக்குரிய கல்விச் செலவுகளும், சேவைகளும். இறுதியாக, வருடமொன்றிற்கு ரூபா 100,000க்குக் குறைவான மொத்த விற்பனவையுடைய சகல வர்த்தகங்களும். வர்த்தக இலாபங்களின் தொகைக் கணிப்பின்போது, மொத்த விற்பனவு வரி ஓர் கழிவாக அனுமதிக்கப்படும்.

**செலாவணி வரி(2)**

இப்புதிய வரி, விடுமுறைப்பயணம், பிரயாணக்கூலிகள், கழிவுகள், விளம்பரங்கள் போன்ற கொள்ளப்பட்ட அந்நிய செலாவணி விடயங்களின் மீது, விதிக்கப்பட்டது. இப்புதிய வரியின் சராசரி வீதம், இறக்குமதி செய்யப்பட்ட வணிகப்பொருட்களுக்கு இறுக்கும் இறக்குமதித் தீர்வையின் சராசரி வீதத்திற்குப் பெரும்பாலும் சமாந்தரமானதாக இருக்கும். இப்புதிய வரியின் வீதங்கள், கொடுப்பனவின் வகையைச் சார்ந்து, 10 சத வீதத்திலிருந்து 25 சதவீதம்வரை வேறுபடும்(2). சொத்துக்கள், பங்கி லாபங்கள், கல்விச் செலவுகள், மருத்துவச் செலவுகள் ஆகியனவற்றின் காரணமாக எழும் கொடுப்பனவுகள் இவ்வரியிலிருந்து விலக்குப் பெறுகின்றன.

---

(1) இவ்வரிகள், 1964ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதி நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன. வரவு செலவுத்திட்டத்திற் கொண்டு வரப்பட்ட வரிவீதங்களாவன, உற்பத்தியாளர் மொத்த விற்பனவு வரி 1லிருந்து 10 சதவீதமும், வர்த்தக மொத்த விற்பனவு வரி அரைச் சதவீதமுமாகும். குழு ஆய்நிலையின் போது உற்பத்தியாளர் மொத்த விற்பனவு வரியின் வீதம் 3 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

(2) அன்னிய செலாவணி வரி, 1964ம் ஆண்டு தை மாதம் 11ம் திகதி நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. கொடுக்கல் வாங்கல்களுக்குப் பொருந்தும் வீதங்களாவன, கொடுப்பனவின் வகையைச் சார்ந்து 10 சதவீதமும், 20 சதவீதமுமாக உள்ளன.

**உயர்ந்த இறக்குமதித் தீர்வைகள்**

போகப் பொருட்கள், ஓரளவு போகத்தன்மைவாய்ந்த பொருட்கள் ஆகிய குறிப்பிட்ட சில விடயங்களின் மேல் இறக்குமதித்தீர்வைகள் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளன. இவ்விடயங்களில் உள்ள பொருட்கள், சலவை செய்யும் இயந்திரங்கள், குளிரேற்றிய பெட்டிகள், நிலம் மினுக்கும் இயந்திரங்கள், ஒலிப்பதிவுக் கருவிகள், கம்பளங்கள், நீராட்டறைக்குரிய ஆடம்பரப் பொருத்திகள், 'மின்சார விளக்குத் துணைக்கருவிகள் ஆகியனவற்றை உட்படுத்தும். மேற்காணும் மாற்றங்களுக்குக் கூடுதலாக, இறக்குமதித் தீர்வைகளின் சீர்திருத்தங்கள், 1962-63ம் ஆண்டில் விதிக்கப்பட்ட 20 சதவீத மேலதிக அறவீட்டின் விளைவால் விரிவாக்கப்பட்டதான முன்னரிருந்த சலுகைக்குரியனவும் சலுகையற்றனவுமான எல்லைகளை, நிலைபேறுக வைத்திருக்க வேண்டி நேர்ந்தது. திறமையான பெற்றேலின் மீதுள்ள தீர்வை, கலனுக்கு 10 சதத்தால் உயர்த்தப்பட்டது.

**தேசிய லொத்தர்**

ஒவ்வொரு இழுப்பிலும் 500 பரிசுகளைக் கொண்ட இருவாரத்திற்கொருமுறை நடைபெறும் தேசிய லொத்தர், ஆஸ்பத்திரி லொத்தரின் இடத்தை எடுத்துக் கொண்டது. தேசிய லொத்தரில் வெற்றி பெறும் பரிசுகளுக்கு வரி விதிக்கப்படுவதில்லை.

**வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கென வரவு செலவுத்திட்டத்திற் கொண்டு வரப்பட்ட நடவடிக்கைகளுள், பின்வருவன கவனிக்கத்தக்கனவாகும்:—

(அ) கோதுமைமாவின் சில்லரை விலையை 5 சதத்தாற் குறைப்பதன் மூலம் அதன் விலையை இருத்தலுக்கு 23 சதமாகக் குறைத்தலும், ஒரு இருத்தல் பாணின் விலையை 25 சதமாகக் குறைத்தலும்.

(ஆ) நுகர்வோருக்கு ஒரு கலன் மண்ணெண்ணெ 94 சதத்திற் கிடைக்கும்வண்ணம், மண்ணெண்ணெயின் விலையை 4 சதத்தாற் குறைத்தல்.

(இ) பருத்தித் துணிகள், பருத்திச் சேலைகள், வண்ண வேலைப்பாடுகளுடன் கூடிய பட்டுத்துணிகள், ''கிரேப்'' ''ஸட்டின்'' துணிகள் போன்ற ஆடைவகைகளுக்குக் குறைவான தீர்வைகளை அறவிடுதல்.

**நடைமுறைச் செலவு**

மீண்டுவரும் செலவின் (அதாவது வாக்குப்பணங்கள் 1, 2, 4, 6 ஆகியனவற்றின்) மொத்தத் தொகை, 17904 இலட்சம் ரூபாய்களாகும். இதில் மூலதனச் செலவுத்தன்மை உடைய விடயங்களையும், ஆழ்நிதிக்கு உதவுவதற்கான மதிப்பிட்டுத் தொகைகளையும், கடன்களின் நேரடித் திருப்பிக் கொடுப்பனவையும், கழித்தபின் எஞ்சிய நடைமுறைச் செலவுத்தொகை, 16607 இலட்சம் ரூபாய்களாக உள்ளது. இது, 1962-63ம் ஆண்டிற்குரிய 15249 இலட்சம் ரூபாய்கள் கொண்ட உண்மைச் செலவீட்டுடன் ஒப்பிடற்குரியது. 1963-64ம் ஆண்டிற்கான நடைமுறைச் செலவின் அதிகரிப்பு, முக்கியமாக உணவு மான்னிய உண்டியலுக்கும், பொதுப்படுகடன் வட்டிக்கும், இளைப்பாறற் சம்பளங்களுக்கும் எனக் கூடுதலான தொகைகள் ஒதுக்கப்பட்டமையின் பயனுக, ஏற்பட்டது.

### மூலதனச் செலவு

மூலதனச் செலவுக்கான மூலமதிப்பீடுகள் (அதாவது 3, 5, 7 ஆகிய வாக்குப்பணங்கள்) 5164 இலட்சம் ரூபாய்களாகும். மீண்டுவரும் செலவுக்கான வாக்குப்பணங்களின் கீழ் உள்ள மூலதனச் செலவு விடயங்களையும் வரவு செலவுத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட ஒதுக்குநிதிகளிலிருந்து அறவிடத்தக்க மூலதனச் செலவுகளையும் சேர்த்தபின், 1963-64ம் நிதி ஆண்டிற்கான மொத்த மூலதனச் செலவு, 6394 இலட்சம் ரூபாய்களாக உள்ளது. இத்தொகை, 1962-63ம் ஆண்டில் உண்மையாக ஏற்பட்ட செலவிலும் பார்க்க 1435 இலட்சம் ரூபாய்கள் கூடியதாகவும், அவ்வாண்டிற்கான மூலமதிப்பீட்டிலும் பார்க்க 691 இலட்சம் ரூபாய்கள் அதிகமானதாகவும் உள்ளது. ரூபா 1435 இலட்சங்களைக் கொண்ட அதிகரிப்பானது, முக்கியமாக உற்பத்தித்தொழில், சுரங்கத்தொழில், வர்த்தகத் தொழில் என்ற பகுப்புக்களின் கீழ் ஏற்பட்ட அதிகரித்த செலவுகளினாலும், அத்துடன் அரசாங்க முகவர் நிலையங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களினாலும் உண்டானதாகும்.

### வரவு செலவுத்திட்டக்குறைக்கு நிதியீட்டுதல்

மக்கள் பிரதிநிதி சபையில் இறுதியாக வாக்களிக்கப்பட்டபடி அரசாங்கக் கணக்குகள், 4745 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட ஓர் வரவு செலவுத்திட்டக்குறையைப் பிரதிபலிக்கின்றன. இவ்வரவு செலவுத்திட்டக் குறைக்கு நிதியீட்டுவதற்கு, 2200 இலட்சம் ரூபாய்கள் நிதித்தாபனங்களிலிருந்தும் ஏனைய முதலீட்டக்காரர்களிடமிருந்தும் பெறப்படும் உள்நாட்டுக்கடன்பாட்டின் மூலமாகவும், 1750 இலட்சம் ரூபாய்கள் அந்நிய உதவிகளிலிருந்து பெறும் வருமானங்களினாலும், 250 இலட்சம் ரூபாய்கள் நிர்வாகக் கடன்பாட்டின் மூலமாகவும், மொத்தம் 4200 இலட்சம் ரூபாய்கள் வரை நிதியீட்டம் செய்யப்படலாம் என் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய 545 இலட்சம் ரூபாய்களுக்கு, வர்த்தக வங்கிகளுக்கு அரசாங்கப் பிணைகளை விற்பதனூடாகவும், இறைசேரி உண்டியல்களை வெளியிடுவதன் மூலமாகவும், நிதியீட்டம் செய்யப்படவிருக்கின்றது.

அந்நிய உதவிகளின் வருமானங்கள், விபரமான ஓர் விளக்கத்தின் பொருட்டு பின்வரும் பகுதியிற் தனியாகக் காட்டப்பட்டுள்ளன.

### அந்நிய உதவிகள்

1963-64ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில், அந்நிய உதவிகளிலிருந்து பயன்படுத்துவதற்கென எதிர்பார்க்கப்பட்ட தொகை 1750 இலட்சம் ரூபாய்களாக உள்ளது. இத்தொகை, சென்ற நிதியாண்டிலிருந்த தொகையிலும் பார்க்க 250 இலட்சம் ரூபாய்கள் அதிகமானதாகும். 1962-63ம் ஆண்டில் உண்மையிற் கிடைத்த அந்நிய உதவி வருமானத் தொகையுடன் ஒப்பிடுகையில், இத்தொகை 752 இலட்சம் ரூபாய்கள் அதிகமானதாகும். 1303 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஓர் தொகை, குறிப்பிட்ட சில திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டது. இத்தொகையில், 1068 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகை கடன்களின் வடிவத்திலும், கொடுகடன்களின் வழியாக உள்ள பயன்பாடுகளின் வடிவத்திலும், 240 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகை நன்கொடைகளின் வடிவத்திலும் வழங்கப்படும்.

நடைமுறை நிதிவருடத்தில் ரூசியாவிடமிருந்து 386 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அந்நிய உதவி, முன்னர் ஒத்துக்கொள்ளப்பட்ட 1428 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கொடுகடனிலிருந்து இலங்கைக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இக்கடனிற் பெரும்பகுதியை, இரு கடன்கள் ஏற்றுக் கொள்ள இருக்கின்றன. இவற்றில் ஒன்று இரும்பு எஃகுக் கூட்டுத்தாபனத்திற்கான 150 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கடனும், மற்றது ''ரயர்'' ''ரியூப்'' கூட்டுத்தாபனத்திற்கான 200 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கடனும் ஆகும். எஞ்சியிருக்கும் தொகை, கண்டியில் நிறுவப்படவிருக்கும்

பழங்கள், மரக்கறிகளைப் பேணிவைக்கும் குளிர்க் களஞ்சியப் பொறித் தொகுதிக்கும், மாவரைக்கும் ஆலையொன்று நிறுவுவதன் பொருட்டும் பயன் படுத்தப்படவிருக்கின்றது. சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கிக் கடன்களிலிருந்து, முன்னர் நடந்த ஒப்பந்தப் பேச்சின்படி ஒப்புதலளித்த கடன்களில் ரூபா 301 இலட்சங்களைக் கொண்ட தொகை, 1963-64ம் நிதியாண்டின்போது இரண்டு நீர் மின்சாரத் திட்டங்களுக்கான (திட்டங்கள்: 2அ, 2ஆ) வேலைக்கும் அத்துடன் கிராண்ட்பாஸில் இரண்டாவது வெப்ப-மின் சாரப் பொறிகளைத் தாபிப்பதற்கான வேலைக்கும் பயன்படுத்தப்படவிருக்கின்றது. ஏனைய பிரதான அந்நிய உதவி வருமானங்கள் பின்வருமாறு:—(அ) மேற்கு ஜெர்மனியிலிருந்து 164 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகை. இதில் 141 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகை இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்திற்காகவாகும். (ஆ) கனடாவிலிருந்து 213 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகை. இதில் 96 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகை மஸ்கெலிய ஓயா திட்டத்திற்காகச் செலவழிக்கப்படவிருக்கின்றது.

குறிப்பு:—வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்குப் பின், அரிசி, சீனி, கோதுமைமா ஆகியனவற்றிற்கான உலக விலைகள் அதிகரித்துள்ளன. இவற்றுடன் கப்பற்கூலி வீதங்களும் அதிகரித்துள்ளன. ஆகவே, இவ்விடயங்களை இறக்கும் போதுள்ள விலையின் அதிகரிப்புடனும், கூடுதலான தாமத வரிச்செலவுடனும், நிகர உணவு மான்னிய உண்டியலின் செலவு 2729 இலட்சம் ரூபாய்களிலிருந்து 4399 இலட்சம் ரூபாய்களுக்குத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இது 1670 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஓர் அதிகரிப்பாகும். (1964ம் ஆண்டு மாசி மாதம் 13-ம் திகதியன்று மக்கள் பிரதிநிதி சபையில் கௌரவ நிதிமந்திரியவர்கள் விடுத்த அறிக்கையைப் பார்க்கவும்).